பொதுசன நூலகம்
21 JUL 2004

பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி 10 | ஞாயிற்றுக்கிழமை | (25.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 219

### கிளிநொச்சியில் அறிக்கை வெளியிட்டது எதற்கு?

## புலிகளுடன் தொடர்பு கொள்வதை உலக வங்கி உடன் நிறுத்தவேண்டும்

### தேசாபிமானிகள் அமைப்பு கடிதம்

உலக நாடுகளின் அரசாங்கங்களுக்கு உதவி வழங்கிவரும் பெரும் நிறுவனமான உலகவங்கி, விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொள்வதை உடன் நிறுத்தவேண்டும் என்று தேசபிமானிகள் அமைப்புக் கோரிக்கை விடுத்திருக்கிறது.

உலகப் பெரும் நிதி நிறுவனமான உலகவங்கி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அமைப்பு ஒன்றுடன் தொடர்புகளைப் பேணி அவர்களுக்கு உதவிகள்ள வழங்க முன்வந்திருப்பது வியப்பை ஏற்படுத்தி இருப்பதாகவும் இலங்கைக்கான உலக வங்கியின் வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோலடுக்கு தேசாபிமானிகள் அமைப்பு, அனுப்பிவைத்திருக்கும் கடிதத்தில் தெரிவித்துள்ளது. இறைமையுள்ள நாடொன்றுடன் மேற்கொள்ளும் தொடர்புகள் போன்றே விடுதலைப் புலிகள் அமைப்புடனும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளை யானை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

யாஎல காட்டுப்பகுதியில் வெள்ளை யானை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த யானை உலகின் ஒரேஒரு வெள்ளையானை எனத் தெரிவிக்கப்படுகிறது. வனவளப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி பிரிவிராஜ் பெர்னாண்டோ இதனை உறுதிப்படுத்தினார்.

இந்த வெள்ளை நிறப் பெண்யானை 11 வயதுடையது. கடந்த வாரமே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த யானை தற்போது 17 யானைகளை உள்ளடக்கிய கூட்டத்தில் வாழ்கிறது. இது ஆராய்ச்சிகளை மேற்கொள்ளச் சுலபமாகவுள்ளது. பொதுவாக அல்பினிசம் என்பது. காட்டு விலங்குகளுக்கு ஏற்படுவது அரிது.

இந்த யானையில் மேலதிக ஆய்வுகளை தாம் நடத்தவிருப்பதாகத் திணைகளத் தலைவர் தயானந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# 83 கறுப்பு ஜூலை நினைவுகள் இன்று துக்கம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

**1983 ஜூலையில் சிங்களப் பேரினவாதிகளால் தமிழ்மக்கள் மீது திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப் படுகொலையின் 21 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். இனஅழிப்புப் படுகொலையின் கொடூரங்களை நினைவுகூரும் வகையில் யாழ். குடாநாடு தழுவிய ரீதியில் இன்று துக்கம் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழ்மக்கள் மீது சிங்களப் பேரினவாதிகள் முன்கூட்டியே திட்டமிட்டு மேற்கொண்ட இனஅழிப்புக கொடூரங்களை நினைவுகூரத்தக்க வகையில் இன்றைய நாளை துக்கநாளாக முன்னெடுக்குமாறு அனைத்துத் தமிழ்மக்களையும் யாழ்ப்பாண மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது.

அரச, கூட்டுறவு, தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்களைப் பூட்டி கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு எமது உள்ளக்குமுறல்களை உலகிற்கு வெளிக்காட்டுவோம்.

இயல்புநிலை குன்றாத வகையிலும், மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையிலும், போக்குவரத்துச் சேவைகளை வழமைபோன்று நடாத்துமாறு வேண்டுகின்றோம். அனைத்து வாகனங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு சேவையில் ஈடுபடுமாறு வேண்டுகின்றோம்.

அதேவேளை, மருந்து விற்பனை நிலையங்கள், மீன், மரக்கறிச் சந்தைகள் வழமைபோல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பெங்களூருக்குச் செல்வதற்கு ஈழவேந்தனுக்கு அனுமதி மறுப்பு

### விமானநிலையத்தில் வைத்து திருப்பியனுப்பப்பட்டார்

(லண்டன்)

இந்தியாவின் பெங்களூர் நகரில் இன்று நடைபெறவிருந்த உலகத் தமிழர் பேரவையின் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ம.கா. ஈழவேந்தன் சென்னை விமான நிலையத்தில் வைத்து இந்திய அதிகாரிகளினால் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் எம்.பியுமான பெ.சந்திரசேகரன், ம.கா.ஈழவேந்தன் உட்படப் பேரவையின் உறுப்பினர்கள் பலர் நேற்று சென்னை விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

கட்டுநாயக்கா விமான நிலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

பாராளுமன்ற உறுப்பினர் ம.கா. ஈழவேந்தன் சென்னை விமான நிலையத்தில் வைத்து இந்திய அதிகாரிகளினால் திருப்பியனுப் நிலையத்தைச் சென்றடைந்த னர்.

கட்டுநாயக்கா விமான நிலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

அனைத்துத் தமிழமக்களையும் யாழ்ப்பாண மாவட் டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது.

அரச, கூட்டுறவு, தனியார் நிறுவனங்கள், வர்த்

அதேவேளை, மருந்து விற்பனை நிலையங்கள், மீன், மரக்கறிச் சந்தைகள் வழமைபோல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வங்கி உத்தியோகத்தர் நேற்று சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மக்கள் வங்கியின் காசாளர் நவாலி வெளிப்பகுதியில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் நேற்றுமாலை சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வங்கி அலுவல்களை முடித்துக்கொண்டு அராலியிலுள்ள தனது வீட்டிற்குச் செல்லும்போது இடைவெளியில் வைத்து அவர் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

இவர் கொண்டுசென்ற பணப்பை மானிப்பாய் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இருந்து நேற்று மீட்கப்பட்டதாகவும், அவர் கொண்டுசென்ற வங்கித் திறப்புக் கோர்வை வங்கியின் முன்பாக நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டதாகவும், மேலும் வங்கி திறக்கப்பட்டிருந்தபோதும் அங்கிருந்த பணமோ நகைகளோ திருட்டுப் போகவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடத்தப்பட்டதாகக் கருதப்பட்ட பிரஸ்தாப நபரைத் தேடிக் கண்டுபிடிக்க நேற்று முழுவீச்சில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு - அம்பாறையில் இளைஞர்கள் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் இரவும், நேற்று அதிகாலையிலும் இரண்டு இளைஞர்கள் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு மண்டூரிலும், நேற்று அதிகாலை அம்பாறை பாண்டிருப்பிலும் இக்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மண்டூரில் இடம்பெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அழகையா கிருபராஜா (வயது 20) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.. இவரது வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவு சென்ற அடையாளம் தெரியாத நபர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மருத்துவப் பிரிவினர் ஆற்றும் பணி மகத்தானது

## தமிழ்ச்செல்வன் புகழ்ந்துரை

(புதுக்குடியிருப்பு)

எமது தேசத்தின் மீது மருத்துவத் தடைகளை விதித்து, மருத்துவமனைகளைக் குண்டுவீசித் தகர்த்து அழித்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டுவிடும் என எண்ணியவர்களுக்குப் பலத்த ஏமாற்றத்தை விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பில் டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த புதிய மருத்துவமனைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)


## யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

# படையினர் முறைப்பாடு மாணவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்கள் விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டு நிகழ்வுகளில் பங்கேற்பதைத் தடுக்குமாறு கோரி படைத்தரப்பினர் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் செய்துள்ள முறைப்பாட்டை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் ஆகியன கண்டித்துள்ளன.

இவ்வமைப்புக்கள் தமது அறிக்கைகளை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளன. (உ)



நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற 82 ஆவது சர்வதேச கூட்டுறவுத் தின விழாவில் தமிழீழ நிர்வாக சேவை யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சி.விஜிதரன் உரையாற்றுவதையும், விழாவில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், விழாவில் கலந்து கொணடோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

-அலுவலகச் செய்தியாளர்-


## விவாத அரங்கு -4

விடயம்

சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!

நடுவர் : சிவ.சரவணபவன் (சிற்பி)
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள

அனுப்பவேண்டிய முகவரி

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

க.பொ.த (சா/த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள் வெளிவருகின்றன.


சுந்தரருக்கு

# "நந்தம ஊரனென்று" நவிலரும் பேறளித்தான்

**சுந்தரமூர்த்தி நாயனாரின் குரு பூசை தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை வெளிவருகின்றது**



திருக்கைலாயத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சிவபிரான் வரவேற்ற இன்றைய தினமே அவருடைய குரு பூசை தினமாகும்.

தம்பிரான் தோழர் எனப்பெருமையுடன் பேசப்படும சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஏழாந் திருமுறைத் தேவாரப் பதிகங்கள் முற்றுப்பெற்ற இடம் திருக்கைலை என்பது தெளிவு.

திருக்கைலையிலே அவர் திருவாய் மலர்ந்தருளிய பதிகம் திருநொடித்தான மலைப்பதிகமாகும்.

இந்தத் திருப்பதிகத்திலே ஆழ்ந்து சிந்திக்கக் கூடிய கருத்துக்கள், அறிவுரைகள் பரந்து காணப்படுகின்றன.

சுந்தரர் தனது பதிகங்களிலே தனது குற்றம், குறைகள் அனைத்தையும் தெளளத் தெளிவாக அனுபவித்துத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு எல்லோருக்கும் வியப்பளிப்பதாகும். மற்றைய நாயனார்கள் சிவனைப் பாடிப் பணிந்து பணி செய்தார்கள். ஆனால், சுந்தரருக்கு சிவபிரானே ஓடோடி வந்து உதவி செய்தார் என்பது வரலாறு. சுந்தரர் சிவனுடன் பக்தனாகப் பழகவில்லை. ஒரு தோழனைப் போலவே பழகினார். அதனாலேயே அவர் "தம்பிரான் தோழர்" என அழைக்கப்பட்டார்.

ஒவ்வொருவரினது பிறப்பு, இறப்பு, திருமணம் ஆகியனவெல்லாம் சிவலோகத்திலேயே நிச்சயிக்கப்படுகிறது என்பதைச் சுந்தரர் திருவாய் மலர்ந்தருளிய பதிகங்களிலே விளக்கியிருக்கிறார்.

திருக்கைலையிலே ஆலால சுந்தரர் என்ற நாமத்துடன் சிவ கைங்கரியம் செய்து வந்த இவர், ஒரு தினம் சிவ பூஜைக்காக மலர்களைப் பறிக்க மலர் வனம் சென்றபோது அநிந்திதை, கமலினி ஆகிய இரு சூக்குமப் பெண்களைக் கண்டு மனம் பேதலித்ததால் சிவபூஜைக்குச் செல்லவேண்டிய நேரம் தாமதமானது.

சிவபூஜைக்கு நேரமானதன் உண்மைக் காரணத்தை அறிந்த சிவபிரான் ஆலால சுந்தரரையும், அநிந்திதை, கமலினி ஆகிய சூக்குமப் பெண்களையும் பூவுலகில் பிறந்து தங்களது ஆசாபாசங்களை நிறை வேற்றுமாறு சாபமிட்டார்.

இதனால் மனம் வருந்திய ஆலால சுந்தரர் சிவன் தாள் பணிந்து தனது குற்றத்தைப் பொறுக்குமாறு மன்றாடியதுடன் பூவுலகில் பிறக்கும் நான் மாயையில் சிக்கித் தடுமாறாமல் என்னைத் தடுத்தாற் கொள்ள வேண்டுமென இரந்து வேண்ட, அவ்வாறே செய்வதாக சிவனும் வாக்களித்தார்.

இதற்கமையவே திருவெண்ணெய் நல்லூரில் சுந்தரரின் திருமண நாளன்று வயோதிப வேதியர் வடிவில் சென்று சுந்தரன் எனது அடிமை என வாதிட்டு, அதனால், சுந்தரரிடமிருந்து 'பித்தா', 'பேயா' என்ற வசை மொழிகளையும் ஏற்று, ஈற்றில் அவரைத் தடுத்தாட் கொண்டார்.

'பித்தா' என நீ அழைத்த அச்சொல்லைத் தலைப்பாகக் கொண்டு என்னைப் பாடு எனச் சிவபிரான் பணித்தற்கமையவே அவர், 'பித்தா, பிறைசூடி, பெருமானே, அருளாளா' என்ற தேவாரத்தைப் பாடினார்.

சிவன் சாபப்படி, திருவாரூரிலே பரவையார் என்ற பெயருடன் பிறந்த அநிந்திதையாரையும், திருவொற்றியூரிலே சங்கிலியார் என்ற பெயருடன் பிறந்த கமலினியாரையும் திருமணம் செய்து, அவர்களாலே சில இடையூறுகளை அனுபவித்து, சத்தியவாக்கைத் தவறவிட்டதனால், இரு கண் பார்வையையும் இழந்து குருடாகி சிவனருளால் மீண்டும் பார்வை பெற்றார்.

சிவஸ்தலங்கள் தோறும் எம் பெருமான் மேல் பதிகம் பாடி அவன் அருளாலே திருப்புக்குடியூரிலே முதலையுண்ட பார்ப்பனச் சிறுவனை உயிருடன் மீட்டு, பல அற்புதங்கள் புரிந்து சேரமான பெருமாள நாயனாரோடு உறவு கொண்டிருந்தார்.

சுந்தரர் தமது 18ஆவது வயதில் இகபோக வாழ்க்கையையெல்லாம் அனுபவித்து, திருவுஞ்சைக் களத்திலே பெருமானை வணங்கி,

"வெறுத்தேன் மனை வாழ்கை"

என்ற பதிகத்தைப் பாடினார்.

சிவபெருமான் இவரது பக்குவ நிலை அறிந்து தேவர்கள் மூலம் வெள்ளை யானையை அனுப்பி அவரைக் கைலைக்கு அழைத்து வருமாறு பணித்தார்.

அவர் வெள்ளை யானையிலேறி ககன மார்க்கமாக கைலை செல்லும் போது திருநொடித்தான் மலைப் பதிகம் பாடினார்.

அப்பதிகங்களின் கருத்துக்கள் மெய்சிலிர்க்க வைக்கும் தன்மை கொண்டன.

*"தானெனை முன் படைத்தான்*
*அது அறிந்துதன் பொன்னடிக்கே"*
*"மந்திரமொன்றறியேன் மண வாழ்க்கை*
*மகிழ்ந்தறியேன்*
*சுந்தர வேடங்களால் துரிசு*
*செய்யும் தொண்டன் எனை"*
*"மண்ணுலகில் பிறந்தும்மை வாழ்த்தும்*
*வழியடியார்*
*பொன்னுலகம் பெறுதல் இன்று*
*கண்டொழிந்தேன்"*

என்பன போன்ற கருத்தாழம் கொண்ட பதிகங்களைச் சுந்தரர் திருவாய் மலர்ந்தருளியி ருக்கிறார்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கைலையில் வெள்ளை யானையிலிருந்து இறங்கியபொழுது திருமால், பிரமன், இந்திராதி தேவர்கள் எல்லாம் அவரை எதிர்கொண்டு வரவேற்றார்கள். அப்பொழுது அங்கிருந்த மந்திரமா முனிவர் இவர் யார்? என்று சிவபிரானிடம் கேட்க, வந்து இறங்கியவர் எமது ஊரவன் என்றார்.

இந்த நிகழ்வைப் பினவரும் பதிகத்தின் மூலம் தெளிவாக்குகிறார் சுந்தரர்.

*"இந்திரன் மால் பிரமன்*
*எழில்மிகு தேவரெல்லாம்*
*வந்தெதிர் கொள்ள என்னை*
*மத்தயானை அருள் புரிந்து*
*மந்திர மாமுனிவர் இவர் யாரென*
*எம் பெருமான்*
*நந்தம ஊரன் என்றான்*
*நொடித்தான் மலை உத்தமனே"*

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சுகமாக கைலை வந்து சேர்ந்ததை வருண பகவான் மூலம் திருஅஞ்சை அப்பருக்கு அறிவித்தார்.

இவர் மணம் முடித்த பரவையாரும், சங்கிலியாரும் சிவலோகம் அடைந்து முன்பிருந்த நிலையைப் பெற்றார்கள்.

*குறிப்பு: உலகிலே வரவேற்புகளும், உபசாரங்களும் அதிகம். செங்கம்பள வரவேற்பு, கௌரவ வரவேற்பு (Guard of honour) எனப் பலவிதமான வரவேற்புகள் இருக்கின்றன. ஆனால் கைலையிலே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கிடைத்த வரவேற்புப்போல யாருக்கும் கிடைக் குமா?*

ஆடிச் சுவாதியிலே சுந்தரர் கைலை சேர்ந்த தினம் பெருமை மிக்கது, புகழ்ச்சிக்குரியது; பேற்றுதற்குரியது.

ஸ்ரீ சுந்தரர் திருவடிகளே சரணம்!

திருவாசகமணி க.மாணிக்கவாசகர்.

*விளம்பர அனுசரணை : வி.எம்.கே. ஜுவலர்ஸ்.*

# எகிப்திய இராஜதந்திரி பணயம்! ஏனையோரை விடுவிக்க பணம்?

(பக்தாத்)

ஈராக்கிலுள்ள எகிப்திய இராஜதந்திரி ஒருவரை ஆயுததாரிகள் பணயக் கைதியாகப் பிடித்து வைத்துள்ளதுடன் ஏற்கனவே பிடிக்கப்பட்ட ஏழு பணயக் கைதிகளையும் விடுவிக்கப் பணம் வழங்குமாறு கோரியுள்ளனர்.




"கடவுளின் சிங்கப்படை" என்று தங்களை அறிமுகம் செய்துள்ள இந்த ஆயுததாரிகள் இந்தியா, கென்யா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஏழு ட்ரக் சாரதிகளை ஏற்கனவே கடத்தியிருந்தனர். அவர்களை விடுவிப்பதற்கு அவர்களது கம்பனிகள் ஈராக்கைவிட்டு வெளியேற வேண்டுமென்று கேட்டிருந்த போதும், இப்பொழுது ஈராக்கில் உயிர் நீத்த ஈராக்கியரின் குடும்பங்களுக்கு இவர்களது தொழில் வழங்குநர்கள் பணம் வழங்கினால் மட்டுமே இவர்கள் விடுவிக்கப்படுவர் என்று அறிவித்துள்ளனர்.

ஈராக்கின் பாதுகாப்புக்கு எகிப்து படைகளை அனுப்பி உதவும் என்ற செய்தி வெளியாகியதைத் தொடர்ந்து எகிப்தின் ராஜதந்திரியான மொம்டோரொப் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் ஈராக்கிற்கு எதுவித இராணுவ உதவியும் வழங்கப்போவதாக தாம் அறிவிக்கவில்லை என்றும் எகிப்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (யே)

# ஆப்கான் குண்டுவெடிப்பில் அமெரிக்க வீரர்கள் காயம்

(கந்தஹார்)

ரோந்து போய்க் கொண்டிருந்த அமெரிக்கப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய கார்க் குண்டுத் தாக்குதலில் நான்கு அமெரிக்க வீரர்கள் படுகாயமடைந்தனர்

காயமடைந்தவர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்படும் அதே வேளை, இவர்களில் இருவர் இறந்து விட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.





சம்பவத்தை நேரில் பார்த்த பொலிஸ் வீரர் ஒருவர் கருத்துக் கூறுகையில் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து நான்கு வரர்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும் அவர்களில் யாரும் இறந்தனரா என்று தமக்குத் தெரியாது என்றும் தெரிவித்தார்.

அமெரிக்கக் கூட்டுப்படைப் படைத் தலைமையகப் பேச்சாளர் சார்ஜன்ட் ஆன் பெனட், இது பற்றித் தமக்கு எதுவித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என்று குறிப்பிட்டார். ஆனால், தாக்குதல நடைபெற்ற இடத்தில் அமெரிக்க மற்றும் ஆப்கானியப் படைகள் கூட்டு ரோந்துப் பணியில் ஈடுபட்டதாக அறிவிக்கப்படுகிறது. (யே)

# துருக்கிய ரயில் விபத்துக்கு மிதமிஞ்சிய வேகமே காரணம்!

(பமுக்கோவா)

கடந்த வியாழனன்று துருக்கியில் இடம்பெற்ற கோர ரயில் விபத்திற்கு மிதமிஞ்சிய வேகமே காரணமென்று துருக்கியின் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.




குறிப்பிட்ட பாதையில் ரயில் ஒன்றின் ஆகக்கூடிய வேகம் 80 கிலோ மீற்றராகவே இருக்க வேண்டும். ஆனால், மேற்படி ரயில் வண்டி மணித்தியாலத்திற்கு 118 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்துள்ளது.

இந்த விபத்துக் காரணமாக 36 பயணிகள் பலியானதுடன் 81 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் பினாலி யில்டிரிம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துப்பற்றிய விசாரணைகள் முடிவடையும் வரை இஸ்தான்புல்லுக்கும் அங்காராவுக்குமிடையிலான ரயில் சேவைகள் நிறுத்தப்படமாட்டாதென்றும் பாதைகள் சீர்செய்யப்பட்டவுடன் ரயில் போக்குவரத்து ஆரம்பமாகுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (யே)

# உச்ச நீதிமன்ற அறிவிப்பால் இந்தோனேசியாவுக்குப் பின்னடைவு

(ஜகார்த்தா)

உலகமெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்தோனேசியாவின் பாலித் தீவுக் குண்டுத்தாக்குதலில் கைது செய்யப்பட்ட டசின் கணக்கான பயங்கரவாதிகளுக்கெதிராகப் பயங்கரவாதச் சட்டங்களைப் பயன்படுத்துவது யாப்புக்கு முரணானது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளதால் அரசாங்கம் மிகுந்த பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது.

பாலி குண்டுவெடிப்பில் 202 உல்லாசப் பயணிகள் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதில் தொடர்புடைய இருவருக்கு ஏற்கனவே 15 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1945ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு இன்னும் இந்தோனேசியாவில் நடைமுறையிலிருக்கும் அரசியல் யாப்புப்படி பயங்கரவாதச் சட்ட நடைமுறைகள் யாப்பு விதிகளை மீறுவதாக அமைந்துள்ளதென நீதிமன்றத்தின் அரசியல் யாப்புப் பிரிவு அறிவித்துள்ளது. (யே)

## WORLD NEWS உலக தரிசனம்

# கைதிகளை விடுவிக்குமாறு குடும்பத்தினர் மன்றாட்டம்

(ஜெய்ப்பூர்)

ஈராக்கிய ஆயுத தாரிகளால் கைது செய்யப்பட்டுள்ள தமது சொந்தங்களை விடுவிக்குமாறு கோரி அவர்களது உறவினர்கள்



ஆயுததாரிகளுக்கு மிக மன்றாட்டமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தியா, எகிப்து மற்றும் கென்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஏழுபேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

அந்தரியாமி ராஜ் எனப்படும் இந்தியக் கைதியின் தந்தையார் இதுபற்றிக் கூறுகையில், "எனக்குரிய எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள், ஆனரல் என்னுடைய மகனை எனக்குத் தாருங்கள்" என்று மன்றாடினார். அந்தரியாமி ராஜின் மனைவி தனது இரண்டு மாதக் குழந்தையுடன் கணவனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்.

புதிதாக ஆயுததாரிகள் விடுத்துள்ள எச்சரிக்கையில் 48 மணி நேரத்தில் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது போனால் பணயக் கைதிகள் கொலை செய்யப்படுவர் என்று அறிவிக்கப்படுகிறது. (யே)

# ஜனநாயகக் கட்சி மாநாடு! பொஸ்ரனில் பாதுகாப்பு அதிகரிப்பு

(பொஸ்ரன்)

கடந்த 2001 செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பிற்பாடு அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாடு அமெரிக்காவின் பொஸ்ரன் நகரில் முதற்தடவையாக நடைபெறவிருப்பதையொட்டி அங்கு கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.




பொஸ்ரன் நகரின் மிக முக்கியமான வீதிகள் மூடப்படவுள்ளன. நகரைச் சுற்றி அதிசக்தி வாய்ந்த நூறு வீடியோக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. விடுமுறையிலிருந்த பொலிஸார் அனைவரும் அவசரமாக மீண்டும் பணிக் கழைக்கப்பட்டுள்ளனர். மாநாடு நடைபெறும் வாரத்தில் பொது மக்கள் பொஸ்ரன் நகருக்குள் தொழிலின் நிமித்தம் வருவதைத் தவிர்க்குமாறு எவ்.பி.ஐ. அறிவித்துள்ளது.

மாநாட்டுக்கு வரும் அனைவரும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படவுள்ளதுடன் 28 ஆயிரம் சதுர அடி சுற்றிப் பாதுகாப்பு வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இன்ரஸ்ரேற் 93 என்று அழைக்கப்படும் பொஸ்ரன் நகரின் பிரதான வீதி உட்பட 40 வீதிகள் பொதுமக்கள் பாவனைக்குத் தடை செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான அச்சுறுத்தல்கள் மிக அதிகமாகக் காணப்படுவதனாலேயே இவ்வாறான பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. (யே)

## விடார் ஹெல்கிசன் இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைசசர் விடார் ஹெல்கிசன் இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வரவுள்ளார்.

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவின் வேண்கோளுக்கு இணங்க இலங்கை வரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சந்திரிகாவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளார்.

தொடர்ந்து, கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரைச் சந்தித்தும் பேசவுள்ளார். (60,10)

## புலிகள் மீதான தடைநீக்கலுக்கு தமிழகத்தில் பலத்த ஆதரவு

## விபரக் கணிப்பீட்டில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து இந்தியாவின் தமிழகத்திலுள்ள பெரும்பான்மையானோர் ஆதரவான நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளதாக தமிழக கணிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் லொயலாக் கல்லூரி யில் நடத்தப்பட்ட கணிப்பீடு ஒன் றில் தேர்தலுக்குப்பின் தமிழக மக்களில் 54.2 சதவீதமானோர் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க ஆதரவு தெரிவித்துள்ளதாகவும், 45.8 சதவீதமானோர் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (121)

## குரங்கு பாஞ்சான் முகாமை புலிகள் கைவிட்டுள்ளனரா?

## க.கா.குழு சந்தேகம்

(கொழும்பு)

திருகோணமலை குரங்கு பாஞ்சான் குளமுகாமை தமிழீழ விடுதலைப்புலிகள் கைவிட்டுள்ளனரா என்பது குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

அததுடன், கடந்த வாரம் இரண்டு தடவை கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் குரங்கு பாஞ்சான் குள முகாமுக்குச் சென்றதாகவும், அப்போது அங்கு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எவரும் இருக்கவில்லை எனவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. (10)

## போராட்ட காலத்தில் கூட்டுறவாளர்கள் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது

### தமிழீழ நிர்வாகசேவை யாழ்.மாவட்டப்பொறுப்பாளர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

எமது போராட்டத்திலும், மிகக் கடுமையான கால கட்டத்திலும் இந்தக் கூட்டுறவு அமைப்புக்களும், கூட்டுறவாளர்களும் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது என தமிழீழ நிர்வாகசேவை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சி.விஜிதரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற 82 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சி.விஜிதரன் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த இரண்டு ஆண்டுகளாக சமாதானச் சூழல் நிலவுகிறது. ஆயினும், எமது மக்கள் இக் காலத்தில் எதைப் பெற்றார்கள்?

அரசாங்கம் சமாதானத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால பாரிய பின்னடைவுகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும். அண்மையில் பொறுப்பெற்ற புதிய இராணுவத் தளபதி தாங்களும் யுத்தத்துக்குத் தயார் எனத் தெரிவித்திருந்தார். அரசாங்கத்தின் அண்மைக்கால போக்குகள் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான முஸ்திப்புகளே.

அரசாங்கம் சரியான முடிவை எடுக்காவிட்டால். எமது போராட்டம் மீண்டும் விடுதலைப் பாதையை நோக்கிச் செல்லும் எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில், கூட்டுறவு தின விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும் கூட்டுறவு உத்தியோத்தர்கள், ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் உட்பட மற்றும் பல பொது மக்களும் கலந்து கொண்டனர். (5)

### விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்ட சர்வோதயா அமைப்பு கிராமம் தோறும் சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது. சமூகம் மற்றும் சுகாதாரம் பற்றி பொது மக்களுக்கு இவ்வமைப்பு விளக்கமளித்து வருவதுடன், கொட்டடி மற்றும் நாவாந்துறை கிராம மக்கள் மத்தியில் சமூக சுகாதார விழிப்புணர்வுக் கருத்தமர்வுகளையும் நடாத்திவருகின்றனர். (51)

### வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுவிற்சர்லாந்து சூரிச்சிலுள்ள ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடாந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. இவ் உற்சவங்களில் பிரதம குருவாக இலண்டனைச் சேர்ந்த குமர குருமணி கலாநிதி சாம்பசிவ சண்முகநாத சிவாச்சாரியாரும், சாதகாசிரியராக சர்வதேச இந்துமத குருபீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (18)

## மகாபொல கொடுப்பனவு 350 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு ஆயிரத்து 650 ரூபாவில் இருந்து 2 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப் படவுள்ளது.

இதேவேளை, உயர் கல்வி நிலையங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் 600 ரூபா மாதாந்தப்படி, ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

புலமைப்பரிசில் பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள வருமான வரையறையும் 12 ஆயிரம் ரூபாவிலிருந்து 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மகாபொல நிதிய அலுவலகத்தின் தலைமைக காரியாலயத்தை இராஜகிரியவில் அமைப்பதற்கு சுமார் 65 கோடி ரூபா செலவிட இருக்கும் திட்டத்தை இடைநிறுத்தி வைப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (60,10)

## போலி முத்திரைத்தாள் மோசடி வழக்கு

## முஹம்மது அலிக்கு ஜாமீன் வழங்க மறுப்பு

(சென்னை)

30 ஆயிரம் கோடி ரூபா முத்திரைத்தாள் மோசடி வழக்கில் டி.ஐ.ஜி. முஹம்மது அலியின் ஜாமீன் மனுவை சென்னை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

உயர் பொலிஸ் அதிகாரியான அவரை ஜாமீனில் விடுதலை செய்தால வழக்குத் தொடர்பான ஆதாரங்களை அவர் அழித்துவிட வாய்ப்பு உண்டு என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

போலி முத்திரைத்தாள் மோசடி வழக்கில் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ள டி.ஐ.ஜி. முஹம்மது அலியின் ஜாமீன் மனு மீது எழும்பூர் கூடுதல் தலைமையியல் நடுவர் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

அப்போது விவாதித்த சி.பி.ஐ. வழக்கறிஞர் ஜாக்கப் டானியல் பெங்களூர் சிறையிலுள்ள இந்த மோசடியின் பிரதான குற்றவாளி அப்துல் கரீம் டெல்கி அங்கிருந்தபடி முஹம்மது அலி உள்ளிட்ட பலருடன் செல்போனில் உரையாடியது ஆடியோ கெஸட்டில்பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அதில் முஹம்மது அலிக்கு மிகப் பெரிய தொகை கொடுக்கப்பட்டுள்ளது பதிவாகியுள்ளது எனக் கூறினார். நிஜாமுதீன் மீது நடவடிக்கை எடுக்காதிருப்பதற்காக அவரது மனைவி நஸ்ரீஸிடமிருந்து முஹம்மது அலி 8 இலட்சம ரூபா பெற்றுக் கொண்டவிபரம் சி.பி.ஐ.விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் சி.பி.ஐ.வழக்கறிஞர் தெரிவித்தார்.

சென்னையில் போலி முத்திரைத்தாள் மோசடி தொடர்பாக, மற்றுமோர் பொலிஸ் அதிகாரியால் கைது செல்லப்பட்ட பாலாஜி என்பவர் முஹம்மது அலியால் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகவும் சி.பி.ஐ வழக்கறிஞர் தமது வாதத்தில் எடுத்துரைத்தார்.

பாலாஜி விடுதலை செய்யப்பட்டபிறகு இரண்டு மாதத்தில் 2 கோடி ரூபா அளவுக்குப் போலி முத்திரைத்தாள் விற்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தில் போலி முத்திரைத்தாள் விற்பனையில் முக்கிய புள்ளியாக முஹம்மது அலி செயற்பட்டார் எனக் குற்றஞ்சாட்டிய டானியல், அவரை வெளியில் விட்டால் இந்த வழக்குத் தொடர்பான ஆதாரங்களை அழித்து விடுவார் என வலியுறுத்தினார்.

இதையடுத்து முஹம்மது அலியின் ஜாமீன் மனுவை நீதிபதி அருள்ராஜ தள்ளுபடி செய்தார்.(து)

## ஜெயலலிதாவின் பொய்ப்புகார்கள் விசாரணை நடத்த வேண்டுகோள்

(சென்னை)

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலின் போது முறைகேடு நடந்ததாக முதலமைச்சர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியதற்குத் தேர்தல் ஆணையம் பதில் கூறவேண்டுமென்று தி.மு.க.தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

வாக்கு இயந்திரத்தில் எந்தக் கட்சிச் சின்னத்தின் பொத்தானை அழுத்தினாலும் அது உதய சூரியன் சின்னத்துக்கே பதிவாகிவிடுகிறது என்று முதலமைச்சர் கூறியதை விடுத்துள்ள அறிக்கையில் கருணாநிதி நினைவு கூர்ந்துள்ளார்.

தமிழ் நாட்டில் 16 தொகுதிகளில்தான் உதய சூரியன் சின்னம் போட்டியிட்டு வெற்றி பெற்றது என்றும் புதுவை உட்பட மற்றைய 24 இடங்களிலும் உதய சூரியன் சின்னம் இல்லாத நிலையில் அ.தி.மு.க. எப்படிப் படுதோல்வி அடைந்தது என்றும் முதலமைச்சரின் இந்தக் குற்றச்சாட்டுக்குத் தேர்தல் ஆணையம் பதில் கூற வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வாக்காளர் பட்டியலில் பெரும்பாலான அ.தி.மு.க.வினரின் பெயர்கள் நீக்கப்பட்டு விட்டதாக ஜெயலலிதா கூறியிருப்பதற்கும் அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார். முதலமைச்சரின் கட்டுப்பாட்டிலுள்ள அதிகாரிகள்தான் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது, தவிர்ப்பது போன்ற அத்தனை பணிகளையும் செய்தார்கள் என்று கூறிய கருணாநிதி, வாக்காளர் பட்டியலில பெயர்கள் நீக்கப்பட்டதென்றால் அதற்கு ஜெயலலிதா ஆட்சி தான் பொறுப்பு என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு நடந்ததாகக் கூறியுள்ள ஜெயலலிதாவுக்குப் பதிலளிக்குமாறு டில்லியில் தேர்தல் தலைமை ஆணையத்திடம் தமிழகத்தைச் சேர்ந்த தி.மு.க. எம்.பி.கள் மனு அளித்துள்ளனர். (து)

## இந்தியச் செய்திகள்



ஆந்திர முதல்வர் ராஜசேகரரெட்டி, எதிர்க்கட்சித் தலைவரும முன்னாள் முதலமைச்சருமான சந்திரபாபு நாயுடு உள்ளிட்ட ஆந்திர சட்டமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுமுன்தினம் புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசியது.

## கல்விக் கடன்கிடையாத மாணவி தற்கொலை கேரளாவில் மாணவர்கள் போராட்டம்

(திருவனந்தபுரம்)

வங்கிகள் கல்விக் கடன் தராததால் மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொண்டதைக் கண்டித்து திருவனந்தபுரத்தில் மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் கலகம் வெடித்தது.

கேரளத் தலைமைச் செயலகத்தினுள் அத்துமீறி நுழைய முயன்ற மாணவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் வீசப்பட்டன.

இதனால் மேலும் ஆத்திரமடைந்த மாணவர்கள் 3 கார்களுக்குத் தீவைத்துக் கொளுத்தினர். வங்கிகளும் கல் வீசித் தாக்கப்பட்டன.

கேரள மாநிலம் அசூரிலுள்ள அரசு பொறியியல் கல்லூரியில் பயின்று வந்த மாணவிக்கு வங்கியொனறு கல்விக் கடன் தர மறுத்து விட்டது. இதையடுத்து அந்த மாணவி, தொழிற் படிப்புக்கான நுழைவுத் தேர்தல் ஆணைய அலுவலக் கட்டடத்தின் உச்சியிலிருந்து வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

அந்த மாணவிக்குக் கல்விக் கடன் தர மறுத்ததைக் கண்டித்து இந்திய மாணவபேரவையினர் திருவனந்தபுரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.


அவர்கள் கேரள தலைமைச் செலயகத்துக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டதால், பொலிஸாருடன் மோதல் ஏற்பட்டது.

இதனால் சிதறி ஓடிய மாணவர்கள் வெவ்வேறு இடங்களில் சிறு குழுக்களாகக் கூடி 3 கார்களை தீ வைத்துக் கொளுத்தினர்.

கோழிக்கூடு நகரமேயரின் கார் உட்பட பல வாகனங்கள் நொருக்கப்பட்டன. வங்கிகள் சிலவற்றையும் மாணவர்கள் கல்வீசிச் சேதப் படுத்தினர். (து)

# மற்றவர்களுக்குப் பணிசெய்து மனநிறைவு கொள்வோம்

"நான்" என்ற அகத்தை கொண்டவர்கள் மற்றவர்கள் மீது அன்பு செலுத்த முடியாது. ஒற்று



மையாக எந்தக் காரியங்களையும் முன்னெடுக்க முடியாது.

தன்னைப் பற்றிய உயர்வு மனப்பான்மையே "நான்" என்ற அகந்தை தோன்றக் காரணமாகும். எப்போது மற்றவர்கள் மீது அக்கறையும் - கரிசனையும் உருவாகின்றதோ அப்போதே சமூகப் பணிசெய்ய மனம் உந்தும். இச் சமூகப் பணிசெய்ய "நான்" என்ற அகந்தை அகன்றுபோக வேண்டும். எம்மை நாம் உயர்வாகப் பேசும் பண்பு மாற்றம் கண்டு, மற்றவர் நலன் குறித்துச் சிந்திப்பது நல்லது.

### வெறுமையும் தாழ்மையும் உயர்வு தரும்

'வெறுமை' என்பது எமக்குள்ளே ஏற்பட வேண்டும். இங்கு வெறுமை என்பது கௌரவம், இனம், சாதி, அந்தஸ்து, படிப்பு போன்றவை எமக்குள் மேலோங்கி இருந்தாலும் அவற்றினால் மற்றவர்களை விட நாம் உயர்ந்தவர்கள் என்ற நிலையும் - அதனைப்பாவித்து மற்றவர்களை அடக்கி ஒடுக்கும் நிலையும் அகன்று ஒரு வெறுமை நிலை ஏற்படுதலாகும்.

இத்தகைய பண்பினை நாம் இயேசுவிலே காணலாம். இதைத் தான் புனிதபவுல் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் கூறிகின்றார்.

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால்

## பரமபிதா காட்டியபாதை

தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச்சாவையே ஏற்குமளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்'' (பிலிப்பியர் 2:6 -10)

கடவுள் வடிவத்தில் உயர்ந்தவராக இருந்த இயேசு முற்றிலும் தம்மைத் தாழ்த்தினார். வெறுமையாகினார். பெத்லேஹேமில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். மற்றவர்களின் "நான்" என்ற அகந்தையினால் தாக்கப்பட்டார். சிலுவையில் கேவலமாக மரித்தார். மீண்டும் உயிர்த்தார். இதனால் பூவுலகம் முழுவதும் பணிந்து வணங்கும் மேலோனாக இன்றும் விளங்குகின்றார். எமக்குள் வாழ்கின்றார்.

### "நான்"மறைந்து வெறுமை ஏற்பட்டால்

காட்டிலே ஒரு முனிவர் வாழ்ந்து வந்தார். அவருடைய புகழ் எல்லாத்திசைகளிலும் பரவியது. பக்கத்து நாட்டு அரசன் அவரைப் பார்க்கவிரும்பினான். தன்னுடைய அமைச்சரிடம் குதிரை பூட்டிய ரதத்தைக் கொடுத்தனுப்பி முனிவரை அரண்மனைக்கு அழைத்து வரும்படிக் கூறினான். அமைச்சர் காட்டிற்குச் சென்று முனிவரை வணங்கி "கர்மயோகி என்ற முனிவர் தாங்கள் தானே? உங்களை எங்கள் அரசர் அழைக்கிறார்" என்றான். அதற்கு முனிவர் "அப்படி இங்கு யாரும் இல்லை" என்று கூறினார். அமைச்சர் வருத்தத்தோடு சென்று அரசனுக்கு இதைத் தெரிவித்தார். "இதில் ஏதோ சூட்சுமம் இருக்கிறது, மறுபடியும் சென்று அவரைக் கட்டாயப்படுத்தி அல்லது தூக்கிய ரதத்தில் வைத்துக் கொண்டு வந்துவிடுங்கள்" என்று கூறினார். அமைச்சரும் அவ்வாறே செய்தார். அரண்மனையில் முனிவரைக் கொண்டு வந்து உட்கார வைத்தார். அரசன் முனிவரிடம் "கர்மயோகி" என்ற முனிவர் தாங்கள் தானே? என்று கேட்டதற்கு ஏன் இல்லை என்று கூறினீர்கள்? எனக் கேட்டார். அதற்கு அந்த முனிவர் "அந்த ரதத்தைக் கொண்டு வாருங்கள்" என்றார் முதலில் ரதத்திலிருந்து குதிரையைக் கழற்றும்படி கூறினார். பின்பு அரசனைப் பார்த்து "இது தான் ரதமா?" என்றார். அரசன் இல்லை என்றார். இதேபோல் ரதத்தில் ஒவ்வொரு பாகமாகப் பிரித்து இது தான் ரதமா என்று கேட்டார். அரசன் இல்லை என்றார். கடைசியில் முனிவர் ரதம் எங்கே? என்றார் அரசன் விழித்தான்.

பின்பு முனிவர் அரசனைப் பார்த்துக் கூறினார். "நான்" என்பதும் இதுபோலத்தான். நான் என்பது என்னுடைய பெயர், குடும்ப உறவு, படிப்பு, பட்டம், ஜாதி, மதம், இனம் இது எல்லாம் சேர்ந்தது தான் "நான்" இதை ஒவ்வொன்றாகக் கழற்றி எறிந்து விட்டோம் என்றால் கடைசியில் எச்சி இருப்பது வெறுமை ஒன்று தான். இந்த

**வி. பி. தனா**
**அரியாலை**

வெறுமைதான் நம் எல்லோரையும் சமமாகப் பார்த்து அன்பு செய்ய வைப்பது. இந்த வெறுமைதான் சொர்க்கம் - மோட்சம் - இறையரசு எல்லாம் வெறுமையை அடைந்து விட்டவனின் வாழ்வில் எப்போதும் எல்லாமும் நிறைவும் - மகிழ்ச்சியும் தான் என்றார்.

ஆகவே நாம் எம்மை வெறுமையாக்கி, இறையரசின் விழுமியங்களை எமக்குள் உருவாக்கி வாழ்வை முன்னெடுப்போம். இயேசு கிறிஸ்து கொண்டிருந்த பணி நிலையை நாமும் கொண்டு மற்றவர்களுக்காகப் பணியாற்றி மகிழ் வாழ்வு வாழ்வோம்.

## சங்கம நிகழ்வு

(காரைநகர்)

காரைநகர் தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியசாலையில் நடைபெறவுள்ளது.

காரைநகர் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் வே.சிற்சபேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (246)

## தென்னைகளுக்கு 'மைற்' நோய்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மருதங்கேணி செம்பியன் பற்று, வத்திராயன் ஆகிய பகுதிகளிலுள்ள தென்னைகளில் மைற் நோய் தற்போது தீவிரமாகப் பரவிவருகிறது.

இதனால், தென்னை மரங்கள் முற்றாக அழியும் நிலை ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் அப் பகுதிகளிலுள்ள தென்னை மரங்கள் பல அழிவுகளுக்கு உள்ளாகின. எஞ்சிய தென்னை மரங்களும் இந்நோயின் தாக்கத்தால் அழியும் நிலை தற்போது உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (35)

## பாடசாலையில் திருட்டு

(மருதங்கேணி)

பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வகுப்பறை ஒன்று உடைக்கப்பட்டு பாடசாலை மாணவர்களால் உண்டியலில் சேமிக்கப்பட்டிருந்த ஆயிரத்து 500 ரூபா பணம் மற்றும் கசற் றெக்கோடர் ஒன்றும் களவாடப்பட்டிருப்பதாக பருத்தித்துறை பொலிஸில், பாடசாலை அதிபரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இது சம்பந்தமாக பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயசீலன் தலைமையிலான குழுவொன்று விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (35)

# குடாநாட்டுக்கு வருகை தந்த உலக வங்கிப் பிரதிநிதிகள் குழு அபி.பணிகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளை பார்வையிடுவதற்காக உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்று கடந்த புதன்கிழமையாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தது.

உலக வங்கியின் அனுசரணையுடன் வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சினால் மேற்கொள்ளப் படவுள்ள அபிவிருத்தி நிர்மாணப் பணிகள் தொடர்பாக இக் குழுவினர் யாழ்.செயலகத்தில் அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடினர்.

பின்னர், கொழும்புத்துறை, அரியாலை, மட்டுவில் மத்தி, கோவிலாக்கண்டி மற்றும் வடமராட்சி கிழக்கு, ஆழியவளை ஆகிய பிரதேசங்களில் தலா 25 வீடுகள் வீதம் உலக வங்கியினால பரீட்சார்த்தமாக நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ள 125 வீடுகளினதும் அமைவிடங்களையும் இக் குழுவினர் பார்வையிட்டனர்.

அத்துடன், உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ்.கல்வியியற் கல்லூரியில் நிர்மாணிக்க உத்தேசித்துள்ள கட்டடத்தின் அமைவிடத்தையும் இக்குழுவினர் பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த கால போர் நடவடிக்கைகளால் வீடுகள் முழுமையாகச் சேதமுற்ற நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவியும், பகுதியாக வீடுகள் சேதமடைந்துள்ள குடும்பங்களுக்கு தலா 70 ஆயிரம் ரூபா நிதியுதவியும் வழங்குவதற்கு உலகவங்கி உத்தேசித்துள்ளது. (5)

## சுந்தரர் குருபூசை

(அளவெட்டி)

அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தினால் நடாத்தப்படும் சுந்தரர் குருபூசை தின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை கும்பளாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (83)

## அபராதம் விதிப்பு

(மருதங்கேணி)

அல்வாய் வடக்கில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்த இருவரைப் பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது, இருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபாவும், 10 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (35)

## காணி வழங்கல்

(மருதங்கேணி)

வடமராட்சிக்கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள காணியற்றவர்களுக்கு காணிகளை வழங்க மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ப.வேலாயுத பிள்ளை நடவடிக்கை எடுத்துள்ளார்.

அந்த வகையில், அரசாங்கக் காணிகள் நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களினால் அளவீடுசெய்யும் பணிகள் யாவும் தற்போது பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (35)

## மாதிரிப் பொதுப் பரீட்சை

(கொழும்புத்துறை)

இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரிப் பொதுப் பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கான நிலையங்களிலேயே நடைபெறவுள்ளது.

பரீட்சைகளில் கலந்து கொள்ளும் மாணவர்களின் புள்ளி விபரங்கள் ஒகஸ்ட் மாத முற்பகுதியில் அந்தந்தப் பாடசாலை அதிபர்களூடாக அறிவிக்கப்படும் என யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (51)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலைக்கு "சோவா" நிறுவனம் அண்மையில் கற்றல், கற்பித்தல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மேற்படி நிறுவன அதிகாரிகள் வடமராட்சி கிழக்கிற்கு விஜயம் செய்தபோதே வசதிகள் அற்ற பாடசாலைகளுக்கு கற்றல் கற்பித்தல் உபகரணங்களை வழங்கினர். (35)

# டெங்கை கட்டுப்படுத்துவது குறித்து ஆராய குழுவொன்று கியூபா பயணம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது மிகவேகமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆராய சுகாதார அமைச்சினால் குழுவொன்று கியூபாவுக்கு அனுப்பப் படவுளளது.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த கியூபா சிறந்த தொழில் நுட்பங்களைக் கையாளுகின்றமையினால் அந்த நுட்ப முறைகளை இலங்கையிலும் அமுல்படுத்தலாமா என்பது குறித்து ஆராயும் பொருட்டே சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் அடங்கிய இந்தக் குழு கியூபா செல்லவுள்ளது.

அத்துடன், டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் உருவாகும் விதத்தில் சுற்றாடலை அசுத்தமாக வைத்திருப்போருக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, பாடசாலைகள் மற்றும் பொது இடங்கள் உட்பட சகல இடங்களிலும் சிரமதானப் பணிகளை பொதுமக்களின் உதவியுடன, பொது அமைப்புக்கள் மேற்கொண்டு அரசின் டெங்கு நோய ஒழிப்புத் திட்டத்துக்கு உதவுமாறும் அரசு கேட்டுள்ளது. (10)

# ஹெல உறுமய எம்.பியை வழிமறித்த நாகபாம்பு

(கொழும்பு)


ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரட்ணதேரர் நாடாளுமன்றம் நோக்கில் சென்று கொண்டிருந்த போது அவரது வாகனத்தை நாகபாமபு ஒன்று வழிமறித்துள்ளது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றம் நோக்கி தனது வாகனத்தில் சென்று கொண்டிருந்த தேரரை வழிமறித்த நாகபாம்பு சில மணிநேரங்கள் வரையில் நடுவீதியில் நின்று படமெடுத்து ஆடியதால் இவரது பயணம் தடைப்பட்டது.

எனினும், அப் பாம்பு ஆடி முடிந்து சென்ற பின்னர் தேரர் நாடாளுமன்றத்திற்குச் சற்றுத்தாமதமாகவே சென்றிருந்தார். (4,61)

# ரூர் டி பிரான்ஸ்

இருபது கட்டங்களை உள்ளடக்கிய உலகின் மூன்றாவது மிகப் பெரிய விளையாட்டு நிகழ்வான ரூர் டி பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப்போட்டியின் இறுதிக் கட்டம்



இன்று பிரான்ஸின் மொன்ரோ நகரிலிருந்து பரிஸ் நகரை நோக்கி நகர்ந்த வண்ணமிருக்கிறது. தொடர்ச்சியாக ஆறாவது தடவையும் வெற்றிக் கனியைச் சுவைக்கும் முயறசியில் அமெரிக்கப் போஸ் டல் அணியின் தலைமை வீரர் லான்ஸ் ஆம்ஸ்ரோங் ஈடுபட்டிருக்கிறார்.

இன்று ரூர் டி பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப் போட்டியின் முக்கிய விடயங்கள் பலவற்றை விபரமாகப் பார்ப்போம்.


மொத்தமாக மூவாயிரத்து முந நூற்றி தொண்ணூற்றொன்று தசம் ஐந்து கிலோமீற்றர் தூரத்தை 20 சுற்றுககளில் நாளொன்றுகக்கு 169 கிலோமீற்றர் தூரம் எனும் சராசரியில் வழங்கப்பட்ட நேரத்திற்குள் ஓடி முடிக்க வேண்டியது கட்டாயமாகும். இந்தச் சரா சரித் தூரம் என்பது சுற்றுப் போட்டிகள் இடம்பெறும் பிரதேசங்களைப் பொறுத்து மாறுபடும (உதாரணம் தரை, மலை) இச்சுறறில் ஆகக் குறைந்தது 15.5 கிலோ மீற்றர் தூரமாகும். ஆகக் கூடியது 237 கிலோமீற்றர் தூரமாகும்.

ஒவ்வொருநாளும் தொடர்ச்சியாக 20நாட்கள் நடைபெறும் இப்போட்டிள் பகலிலேயே நடை பெறும்.8வது மற்றும் 14வது சுற்றுக்களுக்குப் பிற்பாடு ஒவ் வொரு நாள் ஓய்வு வழங்கப்படுகிறது. ஆக இரண்டே நாட்கள் தான் ஓய்வு வழங்கப்படுகிறது.

ஒலிம்பிக் போட்டிகள் உலக உதைபந்தாட்டப் போட்டிகள் என்பவற்றிற்கு அடுத்தபடியாக உலகின் அதிகமான மக்களால் கண்டுகளிக்கப்படுவதும் அதிக நாட்கள் நடைபெறுவதுமான பெரிய விளையாட்டு ரூர் டி பிரான்ஸ் ஆகும்.

Tour de France Diary

பேதுரு யேசுதாசன்




# உலகின் 3வது பெரிய விளையாட்டு

## போட்டிச் சுற்றுக்களும் பாதைகளும்

இருபது சுற்றுக்களைக் கொண்ட இத்தொடர் போட்டி




பிரான்ஸிலேயே நடைபெறுகின்றது.பிரான்ஸ் நாட்டின் லீச் நகரில் யூலை மாதத்தின் 4ம்நாள் ஆரம்பமாகும். இத் தொடா, காடுகள், மலைகள், பள்ளத்தாக்குகள் எனபவற்றைககடந்து 20 நாட்களில் யூலை 25ஆம் திகதி பரிஸ் நகரை வந்தடையும். இரண்டு நாட்கள் மட்டுமே ஓய்வு விடப்படும். போட்டி ஆரம்பித்து முடிவடையும் நகரங்களும தூரங்களும் வருமாறு.

சுற்று i. லீச் > சார்லேரோய் 205.5Km
சுற்று ii. சார்லேரோய் > நமுர் 205.5Km
சுற்று iii. வோட்டர்லூ > வோஸ்கேஹோல் 210Km
சுற்று iv.கம்பிறே > அராஸ் 64.5Km
சுற்று v.அமீன்ஸ் > சாட்ஸ் 200.5Km
சுற்று vi. பொனேவர் > ஏஞ்சர்ஸ் 196Km
சுற்று vii. சற்றோபிறெய்னற் > செயின்ற பிறியோக 204.5Km
சுற்று viii. லம்போல் > குயிம்பா 168Km
சுற்றுix. செயின்றலெனாட் டி நொப்ளா > கியூரே 160Km
சுற்றுx. லிமோகஸ் > செயின்ற் பளோ237Km
சுற்றுxi. செயின்ற புளோர் >ஃபிகியக் 164Km
சுற்றுxii. கஸ்ரெல்ஸராஸின் > லாமொங்கி 197.5Km
சுற்று xiii. லான் மெஸான் >நைம் ஸ192.5Km
சுற்று xiv. கார் > நைம்ஸ் 192.5Km
சுற்று xv. வல்ரீஸ் > வில்லாட்டி லான்ஸ் 180Km
சுற்று xvi. போக்டிஒய்ஸன்ஸ >எல அலப்டிஹுஸ் 15.5Km
சுற்று xvii. போக்டி > லீகிராண்ட்போ்ணன்ட் 204.5Km
சுற்று xviii. அனிமாஸே >லோன்ஸ் லீ ஸோனியா 166.5Km
சுற்று xix. பெஸான்கோன் > பெஸான் கோன் 55Km
சுற்று xx. மொன்ரீரோ > பரிஸ்

ஆகிய நாற்பது நகரங்களை இருபது சுற்றுக்களில் போடடியாளர்கள் கடந்து முடிப்பர். அடுத்துச் சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கான சீருடைகளைப் பற்றி நாம் இங்குபார்ப்போம்.

## வெற்றிச் சீருடைகள்

பொதுவாக ஒவ்வொரு அணியினரும் தமக்குரிய சீருடைகளை அணிந்து போட்டிகளில் பங்குபற்றுகின்ற போதிலும, சுற்றுப்போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களுக்கு நான்கு வகையான சீருடைகள் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு சுற்றிலும் பொது நேரக் கணிப்பில் சிறந்த சராசரியைப் பெறும் முதன்மை வீரர்களுக்கு மஞ்சள் சீருடையும், புள்ளிகள் அடிப்படையில் முன்னணி வீரர்களுககு பச்சைச் சீருடையும், சிறந்த மலையேறும் முன்னனி வீரர்களுக்கு சிவப்பு பொல்கா புள்ளிகளுடனான சீருடையும், பொது நேரக்கணிப்பில் முன்னணி வகிக்கும் இளையோர் முதன்மை வீரர்களுக்கு வெள்ளைச் சீருடையும் வழங்கப்படுகிறது. போட்டியின் முதன்மை வீரர் பொதுவாக மஞ்சள் சீருடை யிலும் ஒன்றுக்கு மேற்பட்ட சுற்றுக்களில் வெல்பவர் தொடர்ந்தும் மஞ்சள் சீருடையையே தரித்திருப்பார்.

## விதிமுறைகள்

கடந்த 91 வருடங்களாக நடைபெற்றுவரும் ரூர் டி பிரான்சின வரலாற்றுச் சிறப்புமிக்க போட்டிக்கு விஷேட விதிமுறைகள் இருக்கின்றன. இவை காலத்தின் தேவைகளுக்கேற்ப சிறுசிறு மாற்றங்களைக் கண்டு வந்த போதும் பிரதான விதிமுறைகள் இன்னும் அப்ப டியே இருக்கின்றன.

பொதுவாக ஒவ்வொரு அணியிலும் 9 வீரர்கள் இடம் பெறுவர். வழமையாக 21 அணிகளைச் சேர்ந்த 189 போடடியாளர்கள் பங்குபற்றி வருகின்றனர். ஒவ் வொரு வீரருக்கும் வழங்கப்படும் இலக்கங்கள் சைக்கிளின் முன் பகுதியிலும் வீரர்களின் உடையிலும் பொறிக்கப்பட்டிருக்கும்.



ஒவ்வொரு அணியிலுமுள்ள வீரர்கள் தமது சக வீரர்களுக்கு மட்டுமே சிறு சிறு உதவிகளைச் செய்ய முடியும். உணவு, குடிவகை மற்றும் சைக்கிள் உதிரிப் பாகங்களை வழங்குதல் என்பன இதில் அடங்கும்.

போட்டியின் 50 கிலோ மீற்றருக்குப் பிற்பாடே உண வருந்த முடியும். "உணவு அருந்தும் முடிவு எல்லை" எனும் பதாதை காணப்படும் இடத்தில் அது நிறுத் தப்பட வேண்டும்.

மோட்டார் வாகனங்களின் உதவியுடன் போட்டியாளர்களை இழுத்துச் செல்லுதல், தள்ளுதல், வேறு வகையான உதவிகளைச் செய்தல் என்பன தடை செய்யப் பட்டுள்ளன. இடைவழியில் போட்டியைக் ஃகவிடும் வீரர் ஒருவர் தமது இலக்கத் தகடுகளை போட்டி ஆணையாளரிடம் கையளிக்க வேண்டும். போட்டி முழுவதும் மருத்துவ சேவைப் பிரிவினர் தமது உடனடி சேவையை வழங்குவர்.


## போட்டி ஆரம்பம்

போட்டிகள் ஆரம்பிக்கப்படும்பொழுது அணி வீரர்களுடன் அணி முகாமையாளரும் சமூகமளித்தி ருக்க வேண்டும். போட்டிகள் கையெழுத்து ஸ்தா னத்திலிருந்து அல்லது ஆரம்பிப்பாளர்களால் தெரிவு செய்யப்படும் பிரத்தியேக இடத்தில் இருந்தோ, மிக அருகில் இருக்கும் உயரமான இடத்தில் இருந்தோ ஆரம்பிக் கப்படலாம்.

போட்டியாளர்கள் எப்பொழுதும் குறிப்பிடப்பட்ட பாதைகளில் மாத்திரமே செல்ல அனுமதிக்கப்படுவர். குறுக்கு வழிகளால் தூரத்தை விரைவில் கடக்க முற்படுவது மற்றும் வரையறை செய்யபட்ட நேரத்திற் குள (உலக தராதரம்) ஓடி முடிக்கத் தவறுவது என்பன போட்டியாளரைத் தகுதியிழக்கச் செய்யும்.

## நட்சத்திரங்கள்

பொதுவாக ஒவ்வொரு வருடமும் நடைபெறும் இந்



தப் போட்டி தனிப்போட்டியெனும் வகையில் உதைபந்தாட்டத்திற்கு அடுத்த ஸ்தானத்தை வகிக்கிறது. பொதுவில் ஒலிம்பிக், உதைபந்திற்கடுத்ததாக மூன்றாவது இடத்தைப் பிடிக்கிறது. சுமார் 91 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட இப்போட்டியில் தொடர்ச்சியாக ஐந்து தடவைகள் வெற்றிக் கிண்ணத்தை வென்றவர் அமெரிக்க போல்டல் அணி வீரரான லான்ஸ் ஆம்ஸ்ரோங் ஆவார். இக்கட்டுரை வாசகர்களால் படிக்கப்படும் இன்றைய தினத்தில் ஆறாவது தட வையும் இவ்வெற்றி நோக்கி இறுதிச் சுற்றில் அவர் முன்னிலையில் போட்டியிடுகின்றார்.

இந்தத் தடவையும் அவர் வெற்றி பெறுவாரேயானால் வரலாற்றுச் சிறப்பு மிகு இப்போட்டித் தொடரின் ஜாம்பவனாக அவர் திகழ்வார் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இப்போட்டியின் நட்சத்திர வீரர்களான ஜான் உல்ரிச், ஜவன் பாஸோ, வோல்கர் ஆகியோர் ஆம்ஸ்ரோங்கிற்குப் பின்னால் தொடர்ந்த வண்ண முள்ளனர். ஆயினும் இன்னும் இரண்டு சுற்றுக்களே மீதமுள்ள் நிலையில் 4 நிமிடங்கள் 9 விநாடிகள் வித்தியாசததிலுள்ள ஆம்ஸ்ரோங்கைப் பிடிப்பதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இயற்கை சதி செய்யாது போனால் 32 வயதான ஆம்ஸ்ரோங் வெற்றிவாகை சூடுவார் என்பதில் சந்தேகமில்லை.

# திருமலை துறைமுக விவகாரம் பேச்சுக்குத் தடையாகும் சாத்தியம்

(கொழும்பு)

கடந்த ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சுக்களைக் கையகப்படுத்தக் காரணமாகக் காட்டப்பட்ட மணிராசன்குளமுகாமும், திருமலைத்துறைமுகச் சுற்று வட்டாரப் பாதுகாப்பும் பேச்சுவார்த்தைக்கான தடையாகப் பயன்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் தோன்றியுள்ளன.

மணிராசன்குளமுகாம் விவகாரத்தை ரணில் அரசைக்கலைப் பதற்கான ஒரு காரணியாகப் பயன்படுத்திய ஜனாதிபதி, தாங்கள் பதவிக்கு வந்ததும் அவ்விவகாரத்தைக் கிடப்பில் போட்டிருந்தார்.

ஆனால் சர்வதேச நாடுகளால் நிதிவழங்குவதற்கான நிபந்தனையாக சமாதானப் பேச்சை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டமை மற்றும் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் இடம் பெற்ற தமிழ்த்தேச விரோத நடவடிக் கைகளின் பின்னணியில் அரசு செயற்பட்ட விவகாரம் கண்டுபிடிக்கப்பட்டமை என்பன அரசாங்கத்தை ஒரு இக்கட்டிற்குள் தள்ளியுள்ளது.

இந்நிலையில் விரும்பியோ, விரும்பாமலோ சமாதானப் பேச்சை ஆரம்பிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள அரசு அதனைத் தடுப்பதற்கான மாற்று வழிகளைப் பரிசீலித்து வருவதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

இதனொரு கட்டமாக இந்திய உதவிகளையும், கடன் வசதிகளையும் பெறுவதற்கான முயற்சியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஈடுபடுத்தியுள்ள சந்திரிகா, சீனா விடமிருந்து உதவிகளைப் பெறும் முயற்சியில் அமைச்சர் அநுராபண்டாரநாயக்காவையும் ஈடுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, திருமலைத்துறைமுகத்தைச் சுற்றி புலிகள் முகாம்களை அமைத்துள்ளனர் என்றும், திருமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பு மிகவும் அச்சுறுத்தலிற்கு உள்ளாகயுள்ளது எனவும் குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக முன்வைத்து பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலைத் தள்ளிப்போட முனைந்துவருகிறார்.

இதற்காகவே நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சரை சந்திரிகா அழைத்துள்ளதாகவும், அவர் கொழும்பு வரும் போது இந்த விடயம் அவருக்கு உத்தியோகபூர்வ மாகத் தெரிவிக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

கருணா விவகாரத்தில் அரசின் பங்கு ஐயந்திரிபுற நிருபிக்கப்பட்டமையால் பாரிய புலனாய்வு மற்றும் இராஜதந்திரத் தோல்வியைக் கண்டுள்ள அரசு அவ்விவகாரத் தின் மீதான கவனத்தைத் திசை திருபுவதற்கான ஒரு முயற்சியா கவும் இதனை மேற்கொள்கிறது என உள் வட்டாரங்களுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு அரசியல்வாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் அரசியற்றுறையினர் திருமலை மாவட்டத்தின் சில இடங்களில் தனியார் வீடுகளில் அமைத்துள்ள சிறிய பணிமனைகளையே முகாமகளாகச் சித்தரித்து மேற்கொள்ளப்படும் இம்முயற்சியில், மணிராசன் குளத்தில் விடுதலைப் புலிகளின் அதிக பிரசன்னம் இருப்ப தான சந்தேகமும் வெளியிடப்ப வுள்ளது.

குறிப்பாக, திருமலைத் துறைமுகத்தைச் சுற்றிவளைத்து விடுதலைப் புலிகள் முகாங்களை அமைத்துள்ளனர் என்ற குற்றச்சாட்டோடு, துறை முகத்திற்கு அச்சுறுத்தல் நேர்ந்தால் படையினர் தரைமார்க்கமாகப் போக முடியாதபடி விடுதலைப்புலிகள் முகாம்களை அமைத்துள்ளனர் என்ற குற்றச்சாட்டுக்காக விடுதலைப் புலிக ளின் அரசியற் பணிமனைகளையும் ஜனாதிபதி சந்திரிகா பயன்படுத்த வுள்ளார் எனக் கூறப்படுகிறது.

(18)

## கோப்பாய் கல்விக்கோட்ட....(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கவிதை ஆக்கம்

| பிரிவு | இடம் | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| பிரிவு V | 1ஆம் இடம் | செ.குகன் | - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி |
| | 2ஆம் இடம் | சு.பிரசாந்தினி | - புனித திரேசாள் மகளிர் கல்லூரி |
| | 3ஆம் இடம் | ச.சோபிதா | - அச்சுவேலி மத்திய கல்லூரி |

### சிறுகதை ஆக்கம்

| பிரிவு | இடம் | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| பிரிவு IV | 1ஆம் இடம் | ம.கஜேந்தினி | - கோப்பாய் மகாவித்தி |
| | 2ஆம் இடம் | பா.விதுப்பிரியா | - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி |
| | 3ஆம் இடம் | செ.நிரூபா | - புனித திரேசாள் மகளிர் கல்லூரி |
| பிரிவு V | 1ஆம் இடம் | சி.கிரிஜா | - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி |
| | 2ஆம் இடம் | ம.நிஷாகரா | - இடைக்காடு மகாவித்தி |
| | 3ஆம் இடம் | பூ.ராஜ்வினோத் | - அத்தியார் இந்துக் கல்லூரி |

### பேச்சு

| பிரிவு | இடம் | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| பிரிவு I | 1ஆம் இடம் | த.செஞ்சரன் | - கோப்பாய் நாவலர் வித்தி |
| | 2ஆம் இடம் | இ.தமிழினி | - உரும்.சைவத் தமிழ் வித்தி |
| | 3ஆம் இடம் | வே.பிரதீபா | - உரும். சந்திரோதய வித்தி. |
| பிரிவு II | 1ஆம் இடம் | ந.கஜலக்ஷி | - அச்சுவேலி மத்திய கல்லூரி |
| | 2ஆம் இடம் | பெ.யாதவன் | - ஆவர. நடராசா இராமலிங்கம் வித்தி |
| | 3ஆம் இடம் | அ.விதுசா | - உரும்.சைவத் தமிழ் வித்தி |
| பிரிவு III | 1ஆம் இடம் | செ.தட்சாயினி | - ஆவர. நடராசா இராமலிங்கம் வித்த |
| | 2ஆம் இடம் | சி.அகிலா | - புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி |
| | 3ஆம் இடம் | ந.மயூரிகா | - ஆவர.மகாஜன வித்தி. |
| பிரிவு VI | 1ஆம் இடம் | க.கலையரசி | - புனித திரேசாள் மகளிர் கல்லூரி |
| | 2ஆம் இடம் | ச.சுபதா | - அச்சுவேலி மத்திய கல்லூரி |
| | 3ஆம் இடம் | க.பிரசாத் | - ஆவர. நடராசா இராமலிங்கம் வித்த |
| பிரிவு V | 1ஆம் இடம் | து.தசோனியா | - புனித திரேசாள் மகளிர் கல்லூரி |
| | 2ஆம் இடம் | ம.ஜெயந்தினி | - சோமஸ்கந்தா கல்லூரி. |
| | 3ஆம் இடம் | ச.மீரா | - அச்சுவேலி மத்திய கல்லூரி |

### பாவோதல்

| பிரிவு | இடம் | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| பிரிவு I | 1ஆம் இடம் | இ.கிருத்திகா | - வாதரவத்தை விக்னேஸ்வரா. |
| | 2ஆம் இடம் | வ.சரணி | - சோமஸ்கந்தா கல்லூரி. |
| | 3ஆம் இடம் | ச.வாகினி | - கோப்பாய் நாவலர் வித்தி. |
| பிரிவு II | 1ஆம் இடம் | தெ.வாசுகி | - நடராஜ இராமலிங்க வித்தி |
| | 2ஆம் இடம் | ச.கிலியோபற்றா | - புனித திரேசாள் மகளிர் கல்லூரி |
| | 3ஆம் இடம் | வி.நிரோசன் | - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி |
| பிரிவு III | 1ஆம் இடம் | இ.வினோஜா | - நடராஜ இராமலிங்க வித்தி |
| | 2ஆம் இடம் | த.மீரா | - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி |
| | 3ஆம் இடம் | வ.நிமலதாரணி | - கோப்பாய் மகாவித்தி |
| பிரிவு VI | 1ஆம் இடம் | ச.நிஜாந்தினி | - கோப்பாய் சரவணபவானந்தா |
| | 2ஆம் இடம் | யோ.தாரணி | - உரும்.இந்துக் கல்லூரி. |
| | 3ஆம் இடம் | இ.யாழினி | - உரும்.சைவத் தமிழ் வித்தி. |
| பிரிவு V | 1ஆம் இடம் | வே.திரிசா | - சோமஸ்கந்தா கல்லூரி. |
| | 2ஆம் இடம் | க.சுவர்ணப்பிரதா | - உரும்.இந்துக் கல்லூரி. |
| | 3ஆம் இடம் | சி.சிவதர்சினி | - புனித திரேசாள் மகளிர் கல்லூரி |

### இசையும் அசையும்

| பிரிவு | இடம் | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| பிரிவு I | 1ஆம் இடம் | மு.யசிந்தினி | - வாதரவத்தை விக்னேஸ்வரா. |
| | 2ஆம் இடம் | சி.விசானி | - புனித திரேசாள் மகளிர் கல்லூரி |
| | 3ஆம் இடம் | க.நிறைநிலா | - உரும்.சைவத் தமிழ் வித்தி. |

### இசை தனி

| பிரிவு | இடம் | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| பிரிவு II | 1ஆம் இடம் | ச.சியாந்திகா | - ஆவர. நடராஜ இராமலிங்க வித்தி |
| | 2ஆம் இடம் | தெ.ஜெனீஸ்வரன் | - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி |
| | 3ஆம் இடம் | ச.ஜனார்த்தனன் | - கோப்பாய் சரவணபவானந்தா |
| பிரிவு III | 1ஆம் இடம் | து.நதீபன் | - உரும்.சைவத் தமிழ் வித்தி. |
| | 2ஆம் இடம் | ந.நிசாந்தினி | - உரும்.சந்திரோதய வித்தி. |
| | 3ஆம் இடம் | ஜெ.சிந்துஜா | - ஆவர.நடராஜ இராமலிங்க வித்தி |

### வில்லுப்பாட்டு திறந்த போட்டி

| இடம் | பாடசாலை |
|---|---|
| 1ஆம் இடம்:- | புனித திரேசாள் மகளிர் கல்லூரி |
| 2ஆம் இடம்:- | அச்சுவேலி சரஸ்வதி வித்தி |
| 3ஆம் இடம்:- | உரும். சைவத்தமிழ் வித்தி |

### தமிழ் அறிவு வினா விடைப் போட்டி

| இடம் | பாடசாலை |
|---|---|
| 1ஆம் இடம்:- | புனித திரேசாள் மகளிர் கல்லூரி |
| 2ஆம் இடம்:- | சோமஸ்கந்தா கல்லூரி |
| 3ஆம் இடம்:- | கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி |

### இசை நாடகம் சத்தியவான் சவத்திரி

| இடம் | பாடசாலை |
|---|---|
| 1ஆம் இடம்:- | கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி |

(79 37)

# வவு. மாவட்ட நீதிமன்றத்தில் தினமும் 250 வழக்குகள்

(வவுனியா)

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 250 வழக்குகள் விசாரணை செய்யப்படுவதாக வவுனியா மாவட்ட நீதிபதி எம்இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா நூலகத்தில் இடம்பெற்ற 6வது ஆண்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாள் ஒன்றுக்கு நீதவானுக்கு குற்றச்சாட்டுகள் தொடர்பாக 100 கடிதங்கள் வருகின்றன. அவற்றில் 99 கடிதங்கள் மொட்டைக் கடிதங் களாகும். ஒன்று மட்டுமே கையொப்பம் இடப்பட்டு வருகின்றது.

இதேவேளை, வடக்கு- கிழக்கு பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத தப்பட்டமையினால் வவுனியா உட்பட பல நகரங்களின் அபிவிருத்தி பின் தள்ளப்பட்டுள்ளது எனத்தெரிவித்தார். (10)

# அரசு முகம்கொடுக்கும் நெருக்கடிகளை சமாளிக்கும் முயற்சியில் ஜே.வி.பி.

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் உறுதியளித்த படி 27 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பினை வழங்க முடியாது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முகங்கொடுக்கும் நெருக்கடிகளைச் சமாளிக்க ஜே.வி.பி. தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அரசாங்கத்துக்குப் பாரிய சவாலாக மாறியுள்ள இந்தப் பிரச்சினையை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கெதிரான தனது பிரசாரமாகப் பயன்படுத்தி விடக் கூடாதென்பதில் ஜே.வி.பி உறுதியாகவுள்ளமையே இதற்கான காரணமென நம்பப்படுகிறது.

27ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுமெனவும், தகுதியடிப்படையில் இளைஞாகளுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படுமெனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமலிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை பாராளுமன்றக கட்டடத் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சி களைச் சந்திததுக கலந்துரையாடிய ஜே.வி. பி. அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலையைத் தீர்ப் பது தொடர்பாக தீவிர ஆலோசனைகளிலும் ஈடுபட்டுள்ளது. இதே வேளை, நிதிய மைச்சா மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து இதுதொடர்பில் அழுத் தங்களைக் கொடுப்பதற்கும் ஜே.வி.பி தீர்மானித்துள்ளதாகவும் அரசாங்க வட் டாரங்கள் மூலம் தெரியவருகிறது. (121)

# தேசிய திரைப்படக் கூ.தாபனத்தில் தமிழ்ப் பிரிவு ஒன்றை அமைக்குக!

## கலாசார அமைச்சரிடம் சலன சித்திரம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனத்தில் சுதந்திரமாகச் செயற்படககூடிய வகையில் 'தமிழ்ப்பிரிவு' ஒன்றை உருவாக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கு மாறுகோரி, கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் எச்.எம். விஜிதஹேரத்துக்கு யாழ். சலன சிததிரம் அமைப்பு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சலன சிததிரம் அமைப்பின் பிரதேசக் கிளைகளின் இணைச் செயலாளர்கள் 30 பேர் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள மேற்படி மக்ஜரில்,

இலங்கைச் சமூகத்தை குறிப்பாக இளம் சந்ததியைச் சேற்றுக்குள் தள்ளிச் சாகடிக்க முயன்ற ஆபாசக் கலா சாரத்திற்கெதிராக ஆக்கபூர்வமான அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் துணிச்சலும் தூரதி ருஷ்டியும் உள்ள அமைச்சர் என்ற வகையில் தங்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம். தங்களின் நற் பணி மேலும் தொடர வேண்டும். அதற்கு ஒத்துழைப்பு வழங்க நாம் தயாராகவுள்ளோம்.

சுமார் இரண்டு வருட காலமாக முன்பிருந்த ஆட்சியாளரிடம் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிபபாளர் சபையில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஒருவர் உறுப்பினராக நியமிக்கப்பட வேண டும் என்பது உட்பட முக்கிய பல கோரிக்கைகளை விடுத்திருந்தோம். அத்துடன் இவற்றை வலி யுறுத்தி யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் உண்ணா விரதப் போராட்டமொன்றையும் நடாத்தயிருந் தோம். ஆனால் இவை இன்று தங் கள் மூலம் நிறைவேற ஆரம்பித்திருப்பதையிட்டு மிகவும் மனம் மகிழ்கின்றோம். தங்களது இந்த நடவடிச் கைக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபையில் க.தேவதாசன் அவர்களை உறுப்பினராக நியமித்துள்ளீர்கள். இந் நியமனம் அர்த்தமுள்ளதாக அமையும் வகையில் திரைப்படக் கூட்டுத் தாபனத்தில் சுதந்திரமாகச் செயற்படக் கூடிய "தமிழ்ப் பிரிவு" ஒன்றை உருவாக்கித் தரவேண்டும் .

இதனால் மட்டுமே 1983 கறுப்பு ஜுலையின் தாக்கத்திலிருந்து இலங்கைத் தமிழ்ச் சினிமாவை முழுமையாக மீட்டெடுக்க முடியும் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

அத்துடன்,தேசிய திரைப்படக் கூடடத்தாபனத்துடன் நாம் நெருங்கிய தொடர்பை மேற்கொள் வதற்கு உதவியாக வடபிரதேசக் கிளையொன்றை யாழ்.மாவட்டத்தில் நிறுவித் தரவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் க.தேவதாசன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (18)

## மானிப்பாய் பிரதேச வீரமுரசு கலையரங்கம்

தேசிய எழுச்சி பேரவையின் மானிப்பாய் பிரதேச மாதாந்த வீரமுரசு கலையரங்க நிகழ்வு கடந்த வியாழனன்று இரவு மானிப்பாய் செல்வமுத்து கலை அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மானிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சிவகுமார தலைமையில் இடம்பெற்ற இந் இந் நிகழ்வில் பொதுச் சுடரினை லெப். கேணல் நியூட்டன், லெப்முத்து ஆகிய இரு மாவீரர்களின் தாயார் தம்பி ராசா பரிமளம் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து ஏனைய சுடர்களை மானிப்பாய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இன்பம, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை தபோதினி, மானிப்பாய் இந்துக் கல்லூரில் ஆசிரியர் ப.லோகேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். நிகழ்வின் சிறப்புரையினை தேசிய எழுச்சிப் பேரவை ஊடகப் பேச் சாளர் ப.கனகலிங்கம் ஆற்றினார். தொடர்ந்து மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் வேட்பிலை நடனமும், மானிப்பாய் இந்து கல்லூரி மாண வர்களின் தடைகளைத தாண்டி நாடக மும் இடம் பெற்றது.

(4)

## இன்று ஒரு தகவல்

# பணியில் நேர்மை

ஒருவர் ஓடி வந்தார். இன்னொருவரைப் பார்த்து "சார் உங்கள் சைக்கிளை ஒருநாள் இர்வல் கொடுங்களேன். பக்கத்து ஊருக்குப் போய்வர வேண்டியுள்ளது" என்றார். இவர் சைக்கிளைக் கொடுத்து "பத்திரமாகக் கொண்டுபோங்கள் என்றார். சார் இதைப் பத்திரமாகக் கொண்டு போகிறேன் கவலையே வேணடாம் ஏனென்றால் இதை உங்களுடைய சைக்கி ளாக நான் நினைக்கவில்லை. எனது சைக்கிளாக நினைக்கிறேன்" என்றார். அதன் பின்பு தான் இருவருக்கு உண்மையாகவே பயம் வந்தது. ஏனென்றால் அவ் சொன்னது போலவே அதை தனது சைக்கிளாகவே நினைத்து தள்ளிக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது?

எது எதை நமது பொருளாக நினைக்கவேண்டுமென்பதற்கு ஒருவரையறை உண்டு. சிலா் அலுவலகத்தை வீடாக நினைத்துக் கொள்வதுண்டு. அப்படிப்பட்டவர்கள் கூட வீட்டை அலுவலகமாக நிணைப்பதில்லை. ஏனென்றால் வீட்டில் இவா் ஒபிசாரக நடந்து கொள்முடிவதில்லை. இவை ஒரு புறமிருக்கட்டும். இனி நாம் விஷயத்திற்கு வருவோம்.

பொறியியல் மேதை டாக்டர் விஸ்வேஸ்வரய்யா இருந்தாரல்லவா? அலுவலம்வேறு, சொந்தவேலை வேறு என்பதற்கு ஒரு உதாரணமாக இருந்தவர் அவர். மைசூர் மகாராஜாவிடம் திவானாக இருந்தவர். அவர் ஒருநாள் அரசாங்க வேலை காரணமாக வெளியூர் சென்றிருந்தார். ஹாசன் என்ற ஊருக்குப் பக்கத்தில் ஒரு பயணமாளிகை அங்கே தங்கி விட்டார். இரவு அங்கே தங்கியிருந்துவிட்டு விடிந்ததும் ஊருக்குத் திரும்புவதாகத் திட்டம். இரவு தூங்குவதற்கு நீண்டா நேரம் ஆகிவிட்டது. நீண்ட நேரம் வரை அரசாங்கம் தொடர்பான வேலைகளைப் பார்த்துக் கொண்டி ருந்தார்.

அரசாங்க கோப்புகள் நிறைய இருந்தன. அவற்றை ஒவ்வொன்றாக எடுத்தார். படித்துப் பார்த்துப் பரிசீலனை செய்தார். அவற்றில் எழுத வேண்டியவற்றை எழுதினார். கையெழுத்துப்போட்டு ஒரு வழியாக அந்த வேலைகளை முடித்த பின் என்ன செய்தார் என்றால் தனது சூட்கேஸைத் திறந்து அதிலிருந்து இரண்டு மெழுகு திரிகளை எடுத்துக் ௐகாளுத்திவைத்தார். அந்தப் பயணமாளிகையில் அது வரையில் எரிந்து கொண்டி ருந்த மின்சாரவிளக்குகளை அனைத்தார்.

அதன பிறகு அந்த மெழுகுவா்த்தியின் வெளிச்சத்தில் சில புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்து விட்டார். அந்தப் பயணமாளிகையில் பணியாளராக இருந்தவர் இதைப் பார்த்துவிட்டு ஓடிவந்தார். மறுபடியும் மின் விளக்கைப் பேர்டுவதற்குப் போனார். இவர் அதைப்போட வேண்டாம் என்று கூறிவிட்டார். "இது வரையில் நான் அரசாங்க அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அதனால் மின் விளக்குகள் அப்போது எரிந்ததில் தவறில்லை. இப்போது நான் புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறேன். இது எனது சொந்த வேலை இங்கேயுள்ள மின்விளக்கு ஏன் அதற்காக எரிய வேண் டும்?" என்று கேட்டாராம்.

இப்போதுள்ள சில அரசுப் பணியாளா்களிடம் இந்த சம்பவத்தைப் பேச்சோடு பேச்சாகச் சொல்லிட் பார்த்தேன். இதை அவா்களால் ஜீரணிக்கமுடியவில்லை. "நேர்மை தேவைதான் அதற்காக இப்படியா?" என்பது அவர்களது கருத்து.

விஸ்வேஸ்வரய்யா அப்படிச் செய்தது தான்ஒரு நேர்மையாளர் என்று இந்த உலகிற்கு நிருபிக்கவேண்டும் என்பதற்காக இல்லை. தான் அப்டி நடந்து காட்டினால் தன்னைச் சுற்றியிருப்பவர்களும் அதைக் கேள்விப்படுபவர்களும் முடிந்த அளவுக்குப் பொது வாழ்வில் அரச பணியில் நேர்மையைக் கடைப்பிடிக்க முயற்சி செய்யலாம் என்பதற்காகத் தான்.

இப்போதும் சிலபேர் இருக்கிறார்கள். இவர்கள் அலுவலகம் வேறு வீடு வேறு என்று நினைப்பதில்லை. அவ்வளவு உரிமை. ஒருவர் அப்படித்தான். அவருக்கு அவசரமாக ஐந்தாயிரம் ரூபா தேவைப்பட்டது. அலுவலகப் பணத்தை எடுத்துக்கொண்டார். அந்த நேரம் பார்த்து கணக்காய்வு நடந்தது. இவரும் அகப்பட்டுக் கொண்டார். விசாரணை நடக்கிறது.

அவர் சொன்னார். "சார்...நான் நேரம் காலம் பார்க்காமல் அலுவலகத்தில் வேலை செய்வேன். ஏனெனறால் அதை எனது வீடர்க நினைக்கிறேன். அவசரத்திற்கு அந்தப் பணத்தை எடுத்தேன். மறுபடி வைத்துவிடலாம் என்று தான் இருந்தேன். அதற்குள் இப்படி ஆகிவிட்டது. நீங்கள் என்ன நினைத்தாலும் சரி நான் அலுவலகம் வேறு வீடு வேறு என்று நினைப்பதில்லை அது எனது சுபாவம் என்றார்.

விசாரணை செய்தவர் தீர்ப்பு வழங்கினார். 'உங்கள் சுபாவத்திற்கு மதிப்பளித்து நானும் தீர்ப்பு வழங்குகிறேன் நீங்கள் கொஞ்ச நாட்களுக்கு ஜெயிலில் இருந்து விட்டு வாருங்கள் அது உங்களுக்கு கஷ்டமாக இருக்காது என்று நினைக்கிறேன். ஏனென்றால் அங்கே போனாலும் நீங்கள் உங்கள் சுபாவப் படி வீடு வேறு ஜெயிலில் வேறு என்று நினைக்க மாட்டீர்கள் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமாதானப் பேச்சுக்களின் தேக்கநிலை நாட்டை மீண்டும் ஆபத்துக்கு இட்டுச் செல்லும்

## நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுவார்த்தைகள்ன தேக்கநிலை மற்றும் அதன் தாமத நிலை ஆகியன இலங்கையை மீண்டும் ஒரு ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்லலாம் என நோர்வேயின் பிரதிவெளியுறவு அமைச்சர் விடார்ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.**

ரொய்ட்டர் செய்திச் சேவையில் "யுத்தத்தோடு விளையாட வேண்டாம்" என்ற தொனிப்பொருளில் வழங்கிய கருத்துரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தா்ர்.

அதில் அவர் தொடா்ந்தும் கருத்து வெளியிடுகையில்,



இலங்கையில் அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் வன்முறைகள் மிகவும் கவலையளிப்பனவாக உள்ளன.

குறிப்பாக கொழும்பு -கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல், கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றுவரும் கொலைச் சம்பவங்கள் மற்றும் சூடடுச் சம்பவங்கள் என்பன மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையையே உருவாக்கியுள்ளன.

இவை நாட்டில்ஆபத்தான ஓர் நிலைமையினை மீண்டும் ஏற்படுத்தலாம். இந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதில் எத்தகைய சமிக்ஞைகளும் வெளிப்படுத்தப்படாதது நிரந்தர சமாதானத்தை கேள்விக் குறியாகவே மாற்று எனக் குறிப்பிட்டார். (121)

# அம்பன் மருத்துவமனையை புனரமைக்குமாறு கோரிக்கை

(மருதங்கேணி)

அம்பன் மருத்துவ மனையைப் புனரமைப்புச் செய்து விரைவில் அங்கு வைத்திய சேவையை ஆரம்பிக்குமாறு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுத பிள்ளை யாழ்.மாவட்ட சுகாதாரப் பிரதிட் பணிப்பாளரை கடித மூலம் கேட்டுள்ளார்.

2000 ஆம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் இராணுவத்தினரின் பாவனையிலிருந்த அம்பன் மருத்துவமனை மற்றும் பருத்தித்துறைப பிரதேச சபை, குடத்தனை உப அலுவலகம் ஆகியவற்றை ஒப்படைக்குமாறு அப்பகுதிப் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் மேற்கொண்டுவந்த போராட்டங்களினையடுத்து, இவ்வருட முற்பகுதியில் அம்பன் மத்திய மருந்தகம் படையினரால் கையளிக்கப்பட்டது.

இம் மருநதகத்தை புனரமைக்கப்புச் செய்வதற்கு மதிப்பீடுகளும எடுக்கப்பட்டன. ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் மேற்படி வைத்தியசாலை சொந்த இடத்தில் இயங்க முடியாத நிலையில் இருந்து வருகிறது.

தற்சமயம் தனியார் வீடு ஒன்றில் இதன் வெளிநோயாளர் பிரிவு மாத்திரம் இயங்கிவருகிறது. மருதங்கேணி உதவி சுகாதார அதிபர்,யாழ்.மாவட்ட பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளருககு எழுதிய மேற்படி கடிதத்தில், மருந்தகப் புனரமைப்புக்குத் தேவையான நிதி சம்பந்தமாக யாழ்அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரியுள்ளதாகத் தெரிய வருகிறது. (35)

## இராசி பலன்

**25.07.2004**
**(ஆடி 10, ஞாயிற்றுக்கிழமை)**
**அட்டமி பி.ப.4.29 மணி வரை**
**சுவாதி பின்னிரவு 1.47 மணி வரை**
**இராகுகாலம் 4.32-6.02 மணி வரை**
**சுபநேரம் 9.02-10.32 மணி வரை**
**அட்டமி, நவமி**

**மேடம்**
திடீர் பயணம், பணவரவு, நல்ல வரவேற்பு, விருந்துபசாரம்.

**இடபம்**
சுகவாழ்வு, பணவருவாய், எடுத்த கருமங்கள் கைகூடும், சகோதரர் உதவி.

**மிதுனம்**
காரிய இடையூறு, மனச்சஞ்சலம், வியாபாரச் சிந்தை, சொத்துக்களால் கவலை.

**கடகம்**
ரோகபயம், அற்பர் நேசம், தெய்வ சிந்தை, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
பணவசதி, வாக்குமேன்மை, காரிய அனுகூலம், அன்னியர் சந்திப்பு.

**கன்னி**
உணர்ச்சிவசப்படுதல், பிரயாணம், எதிர் பாராத நன்மை, பொருள் விரயம்.

**துலாம்**
நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, பெரியோர் ஆசி, திடீர் நன்மை.

**விருச்சிகம்**
வீண் மனஸ்தாபம், பணவிரயம், சயன சுகக் குறைவு, அபகீர்த்தி.

**தனுசு**
தொழில் சிந்தை, உறவினர் வருகை, கீர்த்தி, போசன சுகம்.

**மகரம்**
பிறர் உதவி, தூரதேசசெய்தி, செய்தொழில் முன்னேற்றம், காரிய சித்தி.

**கும்பம்**
உடல் உழைப்பு, வீண்பயம், ஆன்றோர் சந்திப்பு, பிரயாணம்.

**மீனம்**
கடன் பிரச்சினை, முயற்சி தடங்கல், நண்பர்கள் விரோதம், உடல் வியாதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# புதிய அரசியல் பயணத்திற்கு தயாராகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

தற்போதைய பதவிக்காலம் முடிவடைந்த பிற்பாடு தேர்தலில் தனது அரசியல் எதிர்காலம் முற்றுப்புள்ளி பெற்றுவிடும் என்ற நிலையை மாற்றுவதற்கான முயற்சிகளில்



தற்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

ஒருவர் இரண்டு முறையே ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியும் என்ற வகையில் 2005ம் ஆண்டுடன் முடிவடையும் அவரது பதவிக்காலத்தின் பின் சந்திரிகாவால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாத நிலை தோன் றியுள்ளது.

இந்த நிலையில், கிழக்கில் பதட்ட நிலையைத் தோற்றுவித்து,புலிகளை மீண்டும் யுத்தத்திற்கு இழுத்து அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துவன் மூலம் தனது பதவியை சிறிது காலம் நீடிக்கலாம் என எதிர்ப்பார்த்திருந்த அவர், அது சாத்தியப்படாதையிட்டு மற்றுமொரு முனையில் தற்போது களத்தில் இறங்கியுள்ளார். இதன் பிரகாரம் விடுதலைப் புலிகள் பற்றிய பயப்பிராந் தியை தென்னிலங்கையில் ஏற்படுத்தி, அதன் மூலம பெரும்பாண்மைப் பலத்தைப் பெற முனையும் சந்திரிகா அவ்வாறு பெரும்பாண்மையைப் பெற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து சகல அதிகாரமும் கொண்ட பாராளு மன்ற அரசை மீண்டும் ஆட்சிக்கு கொணர வழிவகுத்து அதில் தான் பிரதமராக இருக்கவிருப்பம் தொிவித்து அதற்கான வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

குறிப்பாக இதற்கான முன்னெடுப்புக்களை சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் மேற்கொண்டுவரும் அதேவேளை, இது பற்றி சர்வதேச நாடுகளுடனான இராஜதந்திரக் கருத்துப் பகிர்வுகளையும் மேற்கொள்வதற்கு அவர் தனது இராஜதந்திரப் பணியாளர்களிற்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த வகையில், ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரதிநிதியாக இருந்த சார்ளி மகேந்திரனின் இடத்திற்கு தற்போது நியமிக்கப்பட்டுள்ள சமாதானச் செயலகப் பணிப்பாளர் இதற்கான முக்கிய பணிகளை ஆற்றத் தற்போது பணிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாண்டு டிசம்பர் மாதம் வரையும் இப்பணியை ஆற்றும்படி பணித்துள்ள சந்திரிகா, டிசம்பர் மாதத்திலிருந்து அவரை கனடாவிற்கான பிரதம தூதுவராக நியமிப்பதற் கான உத்தரவை வழங்கியுள்ளார்.

இதேவேளை, தென்னிலங்கை வாக்குவாங்கியின் பலத்தை அதிகாிக்கும் வகையில் விடுதலைப்புலிகளிற் கெதிரான கருத்துப் பரப்புரையை மேற்கொள்ளும் செயற்பாடுகளும் தீவிரப்படுத்தப்படவுள்ளன. அத்தோடு தமிழர்கள் புலம்பெயர்ந்து அதிகமாக வாழும் நாடுகளான கனடா, சுவிஸ் போன்ற இடங்களில் தமிழ்மொழி தெரிந்தவர்களையும், ஈ.பி.டி.பி. அமைப்புக்கு நெருங்கியவர்களையும் நியமிக்கும் பணியிலும் அவர் ஈடுபட்டுள்ளார்.

இந்தவகையில் ஏற்கனவே தூதுவராக இருந்து கொன்சலேற்காகப் பதவி இறக்கப்பட்டு செயற்பட்டு வரும் தமிழரைக் கனடா- ரொறண்டோவில் தொடர்ந்து இரு வரு டங்களிற்கு பேணவும், சுவிஸில் ஜெனிவாத் தூதரகத்தில் பணிபுரியும் ஈ.பி.டி.பி. உறுப்பினரைப் பதவியில் மீண்டும் தக் கவைக்கவும் இவர் பரிந்துரைத்துள்ளதாகத் தெரிய வரு கிறது.

இவ்வாறான செயற்பாடுகளினூடாக பதட்டத்தைத் தோற்றுவிதது, தனது பதவியைத் தக்கவைக்க அல்லது அரசியலமைப்பு மாற்றத்தை மேற்கொண்டு தான் பிரதமராக வருவதறகான நடவடிக்கைகளில் தற்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கங்கணம்கட்டிச் செயற்படுவருவது உறுதியாகத் தெரியவந்துள்ளது. (121)

# கோப்பாய் கல்விக் கோட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(தனங்கிளப்பு)

கோட்ட பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடாத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு

### வாசிப்பு

**பிரிவு-I**

1ஆம் இடம்:- இ.மிதுசனா - புனித திரேச மகளிர் கல்லூரி
2ஆம் இடம்:- வி.பிரவீனா - நீர்வேலி சீ.சீ.த.க.பாட.வித்தி.
3ஆம் இடம்:- ச.கிவிதாரணி - ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தி

**பிரிவு-II**

1ஆம் இடம்:- ந.நிதர்சன் - சோமஸ்கந்தா கல்லூரி
2ஆம் இடம்:- யு.லம்சா - உரும்பிராய் இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:- சி.சுஜிதா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

### ஆக்கத்திறன் வெளிப்பாடு

**பிரிவு-I**

1ஆம் இடம்:- இ.கஸ்தூரிராஜன்- அச்சுவேலி மத்திய கல்லூரி
2ஆம் இடம்:- க.நிதியா - உரும்.சைவத்தமிழ் வித்தி.
3ஆம் இடம்:- செ.புவிந்தன் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.
4ஆம் இடம்:- பெ.லாவன்ஜா - உரும். சந்திரோதய வித்தி.

### ஆக்கம் எழுத்து

**பிரிவு-I**

1ஆம் இடம்:- லோ.தர்சிகன் - கரந்தன் இராமுப்பிள்ளை
2ஆம் இடம்:- இ.விதுஸா - அச்சுவேலி மத்திய கல்லூரி
3ஆம் இடம்:- எ.பிரியங்கா - உரும். சைவத்தமிழ் வித்தி.

### கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல்,

**பிரிவு-II**

1ஆம் இடம்:- ம.கபிரினி - கோப்.நாவலர் வித்தி.
2ஆம் இடம்:- சோ.யதீனா - வாதரவத்தை விக்னேஸ்
3ஆம் இடம்:- ச.ஜனார்த்தன் - பத்தமேனி இரட்ணேஸ்வரி

**பிரிவு-III**

1ஆம் இடம்:- ஞா.பாமினி - சோமஸ் கந்தாக் கல்லூரி
2ஆம் இடம்:- பா.அங்குசன் - நடராஜா ராமலிங்க வித்தி.
3ஆம் இடம்:- யோ.கமல்ராஜ் - கோப்பாய் மகாவித்தி.

### கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்

**பிரிவு-IV**

1ஆம் இடம்:- சோ.ஜெயதேவி - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
2ஆம் இடம்:- கு.சுவர்ணவிழி - சரஸ்வதி வித்தி.
3ஆம் இடம்:- செ.வசந்தமதி - அச்சுவேலி மத்திய கல்லூரி

### தமிழ் இயற் கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்

**பிரிவு-V**

1ஆம் இடம்:- செ.சிவாநதி - கிறிஸ்தவ கல்லூரி
2ஆம் இடம்:- சி.சிவரமணி - உரும்பிராய் இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:- யோ.தமிழ்ச்செல்வி - அச்சுவேலி மத்திய கல்லூரி

### இலக்கணப் போட்டி

**பிரிவு-IV**

1ஆம் இடம்:- கே.லமிர்தா - அச்சுவேலி மத்திய கல்லூரி
2ஆம் இடம்:- அ.கோபிகா - சரஸ்வதி வித்தி.
3ஆம் இடம்:- பா.தர்சன் - இடைக்காடு மகாவித்தி.

**பிரிவு-V**

1ஆம் இடம்:- த.உஷா - சோமஸ்கந்தாக் கல்லூரி
2ஆம் இடம்:- தி.மேனகா - அச்சுவேலி மத்திய கல்லூரி
3ஆம் இடம்:- மு.குருபரன் - அத்தியார் இந்துக்கல்லூரி

### குறுநாடக ஆக்கம்

**பிரிவு-IV**

1ஆம் இடம்:- சி.பாலாம்பிகேஸ்வரி - சரஸ்வதி வித்தி.
2ஆம் இடம்:- ம.பிரதீபா - அத்தியார் இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:- கு.ஜீவிதா - புனித திரேசாள் மகளிர்,

**பிரிவு-V**

1ஆம் இடம்:- லோ.சோபிகா - அத்தியார் இந்துக்கல்லூரி
2ஆம் இடம்:- தி.அகல்யா - புனித திரேசாள் மகளிர்,

### கவிதை ஆக்கம்

**பிரிவு-IV**

1ஆம் இடம்:- கு.குணாஜா - கிறிஸ்தவக்கல்லூரி
2ஆம் இடம்:- இ.மயூரி - அச்சுவேலி மத்திய கல்லூரி
3ஆம் இடம்:- இ.சர்மிளா - ஆவரங்கால் மகாஜனா

### இசை தனி

**பிரிவு-IV**

1ஆம் இடம்:- து.கம்சத்வனி - கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி
2ஆம் இடம்:- சி.நதியா - சோமஸ்கந்தாக் கல்லூரி
3ஆம் இடம்:- ச.மேதா - கோப்பாய் மகாவித்தி

**பிரிவு-V**

1ஆம் இடம்:- பு.சுகன்யா - சோமஸ்கந்தாக் கல்லூரி
2ஆம் இடம்:- சி.துஷ்யந்தன் - கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி
3ஆம் இடம்:- வி.துஷ்யந்தினி - அத்தியார் இந்துக்கல்லூரி

### இசைக்குழு-I

1ஆம் இடம்:- கோப்பாய் நாவலர் வித்தி.
2ஆம் இடம்:- வாதரவத்தை விக்கேனஸ்வரா வித்தி
3ஆம் இடம்:- உரும். சந்திரோதய வித்தி

### இசைக்குழு-II

1ஆம் இடம்:- கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி
2ஆம் இடம்:- அத்தியார் இந்துக்கல்லூரி

### நடனம் தனி

**பிரிவு-I**

1ஆம் இடம்:- வி.கஜானா - அத்தியார் இந்துக்கல்லூரி
2ஆம் இடம்:- க.அனோஜா - கோப்பாய் சரவண பவானந்தா

**பிரிவு-II**

1ஆம் இடம்:- ர.ஸ்ரீஜனனி - உரும்.சைவத்தமிழ் வித்தி.
2ஆம் இடம்:- ச.சிந்துஜா - உரும்.இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:- ந.அனுசியா - அத்தியார் இந்துக்கல்லூரி

**பிரிவு-V**

1ஆம் இடம்:- த.கமிற்றா - அச்சுவேலி மத்திய கல்லூரி

### நடனக்குழு

1ஆம் இடம்:- கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி
2ஆம் இடம்:- நடராஜ இராமலிங்க வித்தி.
3ஆம் இடம்:- உரும்பிராய் இந்துக்கல்லூரி

### நாடகம் திறந்த போட்டி

1ஆம் இடம்:- அத்தியார் இந்துக்கல்லூரி
2ஆம் இடம்:- பத்தைமேனி இரட்னேஸ்வரி வித்தி.

(05ஆம் பக்கம் பார்க்க)

# பலாலி இராணுவ வைத்தியசாலையில் 'வார்ட்' தொகுதி திறந்து வைப்பு




பலாலி இராணுவ ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் தேவை கருதி யாழ். இராணுவத் தளபதியின் ஆலோசனைக்கு அமைவாக அங்கு நிர்மாணிக்கப்பட்ட "வார்ட்" தொகுதி கடந்த 21ஆம் திகதி புதன் கிழமை காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பலாலி இராணுவ ஆதார வைத்தியாசலையின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் என்னிபி. பக்ஷவீரவின் அழைப்பையேற்று வருகைதந்திருந்த யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுவில் சந்திரபால இவ் வார்ட தொகுதியினை வைபரீதியாகத் திறந்து வைத்தார்.

இதில் வார்ட்-2இல் ,ஈ.சீ.ஜி பிரிவு ,நாளாந்த கடமை வைத்திய அதிகாரியின் காரியாலயம் மற்றும் நோயாளருக்கான உணவகம் ஆகியன அடங்கும் இதற்காக கடந்தாண்டு ஒதுக்கப்பட்ட நிதியில் 7 இலட்சத்து 27ஆயிரத்து 765 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இவை தவிர இதன் மேல்மாடியில் பயிற்சி நெறிக்கான மண்டபம் மற்றும் சகல வசதிகளையும் கொண்ட வார்ட் என்பனவும் இவ் வருட இறுதிக்குள் 5ஆவது பொறியியல் சேவைப் பிரிவினரால் நிர்மாணிக்கப் படவுள்ளன.

# விசேட காலால் படைப்பயிற்சி பெற்ற ஒரு தொகுதி படையினர் வெளியேற்றம்

யாழ.பாதுகாப்புத் தலைமையகத்தின் கீழ, யாழ.மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள நிரந்தர படைப்பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இராணுவ வீரர்களுக்கு விசேட காலால் படைபயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி இந்தப் பயிற்சிநெறியில் இராணுவ அதிகாரிகள் 03 பேருககும் சாதாரன சிப்பாய்கள் 90பேருக்கும், இந்த விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவர்கள் பயிற்சிகளை முடிதது்க்கொண்டு வெளியேறும் நிகழ்வுகள் 2004.07.21 அன்று மேஜர் ஜெனரல்





எம்.டி.என். சந்திரபாலாவின் தலைமையில் பலாலி ஆசிரியர் பயிறசிச்சாலை மைதானத்தில் மிகவும் விமாசையாக இடம்பெற்றது.

இந்தப் பயிற்சிநெறியில் யாழ். மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள 4,6,7வது காலால் படைப் பிரிவுகளும் 8வது சிங்கப்படைப்பிரிவு 1வது, 4வது 5/7வது, 9வது கெமுனு படைப்பிரிவு 1வது, 6வது, கஜபா படைப் பரிவு, 1வது விஜயபாகு படைப்பிரிவு ஆகியவற்றில் இருந்து தலா 9பேர் வீதம, தெரிவு செய்யப்பட்டு 4வது சமிக்ஞைப்பரிவு 6வது பொறியியல் பிரிவு, பலாலி ஆதார இராணுவ வைத்தியசாலை, பலாலி விமானப் படை முகாம் போன்றவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டு பின்னர் மின்னேரியாவில் அமைந்துள்ள, பீரங்கி பயிற்சி பாடசாலை, திபத்தலாவையில் அமைந்துள்ள குறிபார்த்து சுடும் பயிற்சிப் பாடசாலை, மாதுரு ஓயாவில் அமைந்துள்ள விசேட அதிரடிப்படைப் பயிற்சிப் பாடசாலை, ஊவா குடா ஓவியாவில் அமைந்துள்ள விசேட பயிற்சி முகாம் ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.


இந்தப் பயிற்சிநெறி 2004.03.15ஆம் திகதி ஆரம்பித்து, 2004.07.02ஆம் திகதி முடிவடைநதது. பயிற்சியை வெற்றிகரமாக செய்துமுடித்த அனைவருக்கும், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியினால் சான்றிதல்களும், பதக்கங்களும் வமங்கப்பட்டன.


Tour de France Diary

# 18 வது சுற்றில் மோர்காடோ!

# ஆம்ஸ்ரோங் நிலையில் மாற்றமில்லை

தற்பொழுது நடைபெற்றுவரும் ரூர் டி பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப் போட்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற 18வது சுற்றில் ஸ்பெயின் நாட்டு வீரர் யுவான் மிகுவெல் மோர்காடோ வெற்றி பெற்றார்.





இப்போட்டி முடிவடைய இன்னும் இரண்டு சுற்றுக்களே இருக்கின்றன. போட்டித் தொடரின் நாயகன் பட்டத்தை வெல்வார் என்று எதிர்பார்க்கப்படும் அமெரிக்க போஸ்டல் அணியின் தலைவர் லான்ஸ் ஆம்ஸ ரோலங் தனது முன்நிலையைத் தக்கவைக்கும் நேரத்திற்குள்ளே ஓடி முடித்தார்.

ஆறாவது தடவையாகவும் இப் போட்டித் தொடரின் நாயகன் பட்டத்தை வெல்வார் என்று எதிர்பார்க் கப்படும் அவர் 18வது சுற்று முடிந்த பின் கருத்து வெளியிடுகையில் 2005ல் இந்தப் போட்டித் தொட ரில் தாம் போட்டியிடுவது நிச்சயமில்லை என்று தெரிவித்தார்.

இப்பொழுது 4 நிமிடங்கள் 9 விநாடிகளால் ஆம்ஸ்ரோங் முன்நிலையிலிருக்கிறார். அவரது நெருங்கிய எதிராளியான ஐவன் பாஸோவிற்கு ஆம்ஸ்ரோங்கை வீழ்த்துவதற்குச் சந்தர்ப்பம் இனிப் போதாது, என்று அறிவிக்கப்படுகிறது. 18வது சுற்றில் வெற்றி பெற்றுள்ள ஸ்பெயின் வீரர் மோர்காடோவுக்கு இதுவே அவரது வாழ்நாளின் முதலாவது ரூர் டி பிரான்ஸ் சுற்று வெற்றியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (யே).

# இங்கிலாந்து அணியின் 568க்கு மேற்கிந்திய அணியினர் 208–4

தற்பொழுது இங்கிலாந்தின் லோட்டஸ் மைதானத்தில் இடம் பெற்றுவரும் இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக் குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் மேற்கிந்திய அணியினர் 208 ஓட்டங்களுக்கு நான்கு விக் கெட்களை இழந்திருந்தனர்.

இங்கிலாந்து அணியினர் தமது முதல் இன்னிங்ஸில் சகல விக் கெட்களையும் இழந்து 568 ஓட்டங் களை எடுத்திருந்தனர். 391 ஓட் டங்களுக்கு இரண்டு விக்கெட் கள் என்ற நிலையிலிருந்து துடுப் பெடுத்தாடிய அவர்கள் 568 ஓட் டங்களை எடுத்தனர். நொபர்ட்கீ 221 ஓட்டங்களையும் மைக்கல்வோகன் 103 கட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணியினரின் ஆரம் பத்துடுப்பட்ட வீரர்கள் கிறிஸ கெயி லும் டெவோன் ஸ்மித்து முதல் விக்கெற் இணைப்பாட்டமாக 118 ஓட்டங்களைப் பெற்றனர். ஆட்ட மிழக்கப்பட்ட வீரர்களின் மூன்று விக் கெற்களை இங்கிலாந்து வீரர் ஆஷ்லி கைரஸ் கைப்பற்றினார்.

இந்த விக்கெட்களில் மேற் கிந்திய அணித் தலைவர் பிரயன் லாராவும் அடங்குவார். 11ஓட்டங் களுடன் அவர் விக்கெற் கீப்பரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தா. (யே)





## மெய்வன்மைப் போட்டி

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய் வன்மைப் போட்டிகள் இம் மாதம் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவள்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பிப்பார் என்று அறிவிக்கப்படுகிறது. (யே)

# யூனியன் (லன்டன்) கல்லூரி உதைபந்துப் போட்டிகள்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் லண்டன் வாழ் பழைய மாணவர் களது புதல்வர்களின் 17வது உதைபந்தாட்ட அணி 24.07.2004 வருகைதரவுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து புலம் பெயர்ந்து லண்டனில் வாழும் யா. தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் உதைபந்தாட்ட அணியினர் இலங்கையின் பல பாகங்களிலும் சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ஈடுபடவுள்ளனர்.

**அப்போட்டிகள் பற்றிய விபரம் வருமாறு**

| திகதி | நேரம் | எதிரணி | இடம் |
|---|---|---|---|
| 1. 25.07.2004 | பி.ப.4.00 | கொ/பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி | கல்லூரி மைதானம் |
| 2. 27.07.2004 | பி.ப.4.00 | நுவரேலியா மாவட்ட தெரிவு அணி | பொது விளையாட்டு மைதான நுவரேலியா |
| 3. 28.07.2004 | பி.ப.4.00 | கண்டி மாவட்டதெரிவு அணி | போகம்பர மைதானம், கண்டி |
| 4. 29.07.2004 | பி.ப.4.00 | கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணி | பொது விளையாட்டு மைதானம்,கிளிநொச்சி |
| 5. 31.07.2004 | பி.ப 4.00 | யா/புனித பற்றிக்ஸ் கல்லூரி | கல்லூரி மைதானம் யாழ்ப்பாணம் |
| 6. 02.08.2004 | பி.ப4.00 | யாழ். புனித ஹென்றியரசர் கல்லூரி | கல்லூரி மைதானம் இளவாலை |
| 7. 03.08.2004 | பி.ப.4.00 | யா/மத்திய கல்லூரி | கல்லூரி மைதானம் யாழ்ப்பாணம். |
| 8. 04.08.2004 | பி.ப.4.00 | யா/யூனியன் கல்லூரி, | கல்லூரி மைதானம் தெல்லிப்பழை. |

(யே)

# ரோஸிக்கும் பியாகிக்கும் நடக்கவிருக்கும் போட்டி

இவ்வருடத்திற்கான உலக மோட்டார் சைக்கிள் சம்பியன் பட்டத் திற்கான போட்டியில் யமஹா அணியின் வலன்ரீனோ ரோஸிக்கும் ஹொண்டா அணியின் பியாகிக்குமிடையில் கடும்போட்டி நிலவி வருகிறது.



ஜேர்மன் கிராண்ட் பிரிக் ஸிப் முதலிடத்தை வென்ற தன் மூலம் ஒரு புள்ளி மட்டுமே ரோஸியை விடப் பின்நிற்கும் பியாகி எதிர் வரும் பிரிட்டிஷ் கிராண்ட பிரிக்ஸ் போட்டிகளில் வலன் ரீனோ ரோஸக்குக் கடும் சவாலாக விளங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டனின் டொனிங் டன் பாதைகளில் ரோஸி ஒரு முறை கூடத் தோல்வியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் அவர் கடந்த வருடம் ஹொண்டா அணி வீரராகவே போட்டியிட்டார் இவ்வருடம் அவர் யமஹாவுக்கு மாறி யுள்ளார். அவருடைய இடத்திற்கே பியாகி தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (யே)

# 23 வயது ஹேயே 40வயது தொம் மோதல்

பிரிட்டனின் பரபரப்பான இளம் குத்துச்சண்டை வீரரான 23 வயது டேவிட் ஹேயே முன்னாள் உலக மென்பாரக்குத்துச் சண்டை வீரர் கார்ல் தொம்ஸனுடன் மோதவுள்ளார்.



40 வயதான கார்ல் தொம்ஸன் மிக முரட்டுத் தனமான முன்னாள் சம்பி யனாவார். 20ரவுண்டுக ளில் பத்து வெற்றி களைப் பெற்றிருக்கும் 23 வயதான ஹேயே இப் போட்டியில் பெரும்பாலும் வெற்றி பெறுவார் என்று ஆரூடம் கூறப்பட்டுள்ளது.

அவர் இப் போட்டியில் வெற்றி பெறுவாரேயா னால் அடுத்தபடியாகப் பிரித்தானிய மற்றும் பொதுநலவாய நாடுகளின் சம்பியன் பட்டத் திற்கான போட்டியில் மோதுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (யே)

# விளையாட்டுச் செய்திகள்

ATHENS 2004


ஒலிம்பிக்கிற்கு இன்னும் 19 தினங்கள்

OLYMPICS 2004

## எதென்சுக்கு வாருங்கள் பகுதி VIII

# எதென்ஸ் ஒலிம்பிக் மைதானங்கள் ஒலிம்பிக் உள்ளக விளையாட்டரங்கு

எதென்சுக்கு வடக்கே ஒன்பது கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் மாரோஸி உள்ளக விளையாட்டரங்கிலே ஜிம்நாஸடிக் போட்டிகளும், கூடைப்பந்தாட்டப் போட்டி களும் இடம் பெறவுள்ளன.



பிரதான ஒலிம்பிக் விளையாட்டரங்கிலிருந்து சுமார் 500மீற்றர் தூரத்திலேயே இது அமைக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. 35 மீற்றர் உயர மான நான்கு தூண்களில் இவ்வரங்கின் கூரைகள் வைக்கப்பட்டுள்ளன. உலகிலுள்ள இவ்வாறான உள்ளக ஸ்ரேடியம் இது மட்டுமேயாகும்.

மேற்படி இரண்டு போட்டி நிகழ்வுகளிலும் 420 போட்டியாளர்கள் பங்கெடுப்பர் ஜிம் நாஸ்டிக் போட் டிகளுக்கு 1750பார்வையாளர்களும், கூடைப்பந்தாட் டத்திற்கு 19,500 பார்வையாளர்களும் பங்கெடுப்பர். ஓகஸ்ட் 14 தொடக்கம் 25 வரை ஜிம்நாஸ்டிக் நிகழ்ச் சிகளும் 25 தொடக்கம் 28 வரை கூடைப்பந்தாட் டமும் இடம் பெறும்.

சக்கர நாற்காலிக் கூடைப்பந்தாட்டப் போட்டிகள் செப்ரெம்பர் 18 முதல் 28 வரை இடம்பெறும். (யே)

கொலை மேற்கொண்டாரிற் கொடிதே
அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து - குறள்

வலம்புரி

## நெல் கொடுத்த ராசாவும் உமி கொடுத்த ராசாவும்

மன்னன் ஒருவன் தனது நாட்டு மக்களைக் கொடுமைப்படுத்தி வந்தான். பத்து மூடை அரிசி தன்னிடம் தரவேண்டும் எனவும் அதற்குப் பதிலாக தான் ஒரு மூடை நெல் தருவதாகவும் அவன் அறிவித்தான்.

மன்னனின் கட்டளையை மக்கள் பயம் காரணமாக நிறைவேற்றினர். பத்து மூடை அரிசியைக் கொடுத்து ஒரு மூடை நெல்லைப் பெற்றுக்கொண்டனர்.

நெல்லைப் பெற்ற மக்கள் கூடவே மன்னனைத் திட்டியும் தீர்த்தனர். தன்னை மக்கள் குறைகூறுவது கண்டு மன்னன் கவலைப்பட்டான். பத்து மூடை அரிசியைப் பெற்றுக்கொண்டு ஒரு மூடை நெல்லையாவது கொடுக்கின்றேனே. அதுகூட இந்த மக்களுக்கு விளங்கவில்லையே என்பது மன்னனின் கவலைக்கான நியாயம்.

கவலைகொண்ட மன்னன் தனது மகனை அழைத்து, மகனே! இந்த மக்கள் நன்றியில்லாதவர்கள். பத்து மூடை அரிசியைப் பெற்றுக்கொண்டு ஒரு மூடை நெல்லைக் கொடுக்றேன். இருந்தும், அவர்கள் என்னை நல்லதாகக் கூறுகிறார்கள் இல்லையே. என்னை நல்லவன் என்று கூறுவதற்கு ஏதேனும் உபாயம் கூறு எனக் கேட்டான் மன்னன்.

மன்னனின் மனக்கவலையைக் கேட்ட மகன், வேந்தே! உங்களுக்கு நல்லபெயர் கிடைக்கவேண்டுமானால் அதற்கு ஒரேஒரு வழிதான் உண்டு. அது என்னவெனில், என்னை மன்னனாக்கி நீங்கள் ஓய்வெடுத்துக்கொள்வதுதான் என்றான்.

மகனின் ஆலோசனைப்படியே மகனை மன்னனாக்கிவிட்டுத் தான் ஓய்வெடுத்துக்கொண்டான். மன்னனாகப் பதவியேற்ற மகன், நாட்டுமக்களுக்கு விசேட அறிவித்தலை விடுத்தான். "பத்து மூடை அரிசி தருபவர்களுக்கு ஒரு மூடை உமி தருவேன்" என்பதே அந்த அறிவிப்பாகும்.

புதிய மன்னனின் அறிவிப்பால் மக்கள் குழம்பினர். இருந்தும் என்ன செய்வது. மன்னனின் கட்டளை ஆயிற்றே. பத்து மூடை அரிசியைக் கொடுத்து ஒரு மூடை உமியைப் பெற்றுக்கொண்டனர். உமியைப் பெற்ற மக்கள் முன்னர் இருந்த மன்னனை வாயார வாழ்த்தினர். அட அந்த மன்னன் ஒரு மூடை நெல்லையாவது தந்தாரே! இந்த மன்னனோ கொடுமைகொடுமை என்று கூறினர். பார்த்தீர்களா முன்னைய மன்னனுக்கு நல்ல பெயர் கிடைத்தது.

இப்படித்தான் நம்நாட்டு நிலைமையும். ஐக்கிய தேசிய முன்னணி அரசு பெற்றோலுக்கு ஒரு ரூபா, இரண்டு ரூபாவால் விலையேற்றியபோது ஆ...ஹீ என்று கூக்குரல்போட்ட எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற உருமாற்றத்துடன் ஆட்சிபீடம் ஏறியதும் ஐக்கிய தேசிய முன்னணி செய்த அதே விலை ஏற்றத்தையே தானும் மேற்கொண்டுள்ளது.

எதிர்க்கட்சியாக இருந்தபொழுது விலையேற்றத்தை மக்கள் சார்பில் எதிர்ப்பதாகக் கூறிய கட்சி ஒன்று, தான் ஆட்சிக்கு வந்ததும் தான் எதிர்த்ததையே அமுல்படுத்துகிறது எனில் ஆட்சியாளர்கள் எவரேனும் மக்கள் நலன்கருதிச் செயற்படுகிறார்களா என்பது புரிந்துகொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

இதில் வேடிக்கை என்னவெனில் ஒரு ரூபா, இரண்டு ரூபா விலையேற்றம் என்பதற்கு அப்பால் உமிகொடுத்தது போல் எட்டு ரூபாவால் பெற்றோலின் விலை ஏறியிருக்கிறது.

பார்த்தீர்களா முன்னது பரவாயில்லைப்போல்

# ஆட்பதிவுத் திணைக்களத்தில் விசாரணை அதிர்ச்சிகரமான தகவல்கள் கசிவு !

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலையடுத்து ஆட்பதிவுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் மரணமான பெண்ணிடமிருந்து போலி அடையாள அட்டை கைப்பற்றப் பட்டதையடுத்து, ஆட்பதிவுத் திணைக்களத்தில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகளை நால்வரை கைது செய்த பொலிஸார் திணைக்களத்தின் தலைமை அதிகாரியையும் விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனா.

இந்த விசாரணைகள் மூலம் மிக நீண்டகாலமாக போலி அடையாள அட்டைகளை வழங்கும் மோசடியில் ஆட்பதிவுத் திணைக்கள தலைமை அதிகாா ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு சுமார் 100 போலி அடையாள அட்டைகளை வழங்கும் இவா, ஒரு அடையாள அட்டைக்கு சுமாா 5 ஆயிரம் ரூபாவிலிருந்து 8 ஆயிரம் ரூபாய் வரை அறவட்டு பின்னா அவற்றை தமக்கு கீழ் உள்ள அதிகாாகளுடன் பங்கிட்டுக் கொண்டதாகவும் காவல்துறையினா் தெரிவித்துள்ளனா்.

இதேவேளை, ஆட்பதிவுத் திணைக்கள தலைமை அதிகாாயும், அவருடன் சம்பந்தப்பட்டவா்களும் இலங்கையிலிருந்து தப்பி யோட முடியாத வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸாா் மேலும் தெரிவித்துள்ளனா். (121)

# நாட்டின் அபிவிருத்திக்காக முன்வைக்கப்படும் அரசின் சட்ட மூலங்கள் ஆதரிக்கப்படும்

## கொலன்னாவ சுமங்கல தேரர் உறுதிமொழி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை பதவி கவிழ்க்க எதிர்க்கட்சிகள் தமது பெரும்பான்மையைப் பயன்படுத்த முயற்சித்தால் தமது ஆதரவை விலக்கிக் கொள்வோம் என ஹெல உறுமய தெரிவித்துள்ளதாக, அமைச்சரும் அரசின் பிரதம கொறடாவுமான ஜெயராஜ் பெ்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளாா்.

இது விடயம் குறித்து அமைச்சா் ஜெயராஜ் பொ்னாண்டோ புள்ளே தொடா்ந்தும் தெரிவிக்கையில்,

சபையில் அரசாங்கம் முன்வைக்கும் சட்ட மூலங்களுக்கு எதிராகவும் வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள மாட்டோம் என்றும் அவா்கள் உறுதியளித்துள்ளனா்.

அண்மையில் பாராளுமன்றில் இடம்பெற்ற கசப்பான அனுபவங்களை மறந்துவிடத் தாம் முயற்சிப்பதாகவும் நாட்டின் அபிவிருத்தியின் பொருட்டு இதனை செயற்படுத்த விரும்பியிருப்பதாகவும் ஹெல உறுமயவினா் தெரிவித்துள்ளனா்.

இருப்பினும் எதிா்த் தரப்பில் இருந்துகொண்டு அவா்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவாா்கள். இதற்காக அவா்கள் எந்த ஒரு நிபந்தனையையும் விதிக்கமாட்டாா்கள், பாராளுமன்றில் பதவிகளை கோரமாட்டாா்கள் என்றும் குறிப்பிட்டாா்.

இதேவேளை, நாட்டின் அபிவிருத்திக்காக அரசாங்கம் முன்வைக்கும் சட்ட மூலங்களைத் தாம் ஆதரிக்கப்போவதாக கொலன்னாவ சுமங்கல தேரா் தெரிவித்துள்ளாா்.

அடுத்து ஐ.ம.சு.மு. அரசு ஹெல உறுமயவிற்கு விரைவில் சபாநாயகா் பதவியையும் புத்தசாசன அமைச்சையும் கையளிக்கவுள்ளதாக அரசாங்க வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது. (6)

## ஐக்கிய இலங்கைக்குள்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே சிறந்த வழி

## கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கான தா்வைக் காணமுடியுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினா்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனா்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற செய்தியாளா் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவா்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனா்.

சமாதானப் பேச்சுவாா்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வே சிறநதது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினா் என். ரவிராஜ தெரிவித்தாா்.

இதேவேளை, செய்தியாளா் மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினா் ஜோசப் பரராஜ சிங்கம் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதியினதும், அரசாங்கத்தினதும் தீா்மானத்தின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுவாா்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

சமாதானப் பேச்சு வாா்த்தையை மீண்டும் ஆரம்பிக்குமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் பலதடவை அரசாங்கத்தைக் கோரியருந்தனா். ஆனால், அரசோ சமாதானப் பேச்சுவாா்த்தையை ஆரம்பிக்காமல் இழுத்தடித்து வருகின்றது.

இதேவேளை, சமாதானப் பேச்சுவாா்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னா் இடைக்கால நிா்வாக சபை குறித்த யோசனைகளை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என விடுதலைப்புலிகள் கோரியதாக ஆளும் தரப்பினா் சிலா் கூறி வருவது உணமைக்குப் புறம்பானதாகும் எனக் குறிப்பிட்டாா். (60,10)

## திசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

கிராமம், கிராமமாகச் சென்று மனித குலத்திற்கும் இந்த உலகத்திற்கும் நன்மைசெய். மற்றவர்களுக்கு முக்தியை வாங்கிக் கொடுப்பதற்காக நீ நரகத்திற்கும் செல்லத் தயாராக இருக்க வேண்டும். நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவன். எல்லாம் வல்லவன் நீ.

சுவாமி விவேகானந்தர்

## பரிசோதனைச் செயலமா்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நாளை திங்கட்கிழமை, பாடசாலை மட்ட மாதிரிப் பரிசோதனைச் செயலமா்வு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இடைநிலை வகுப்பிற்குரிய மேம்படுத்தப்பட்ட புதிய பரிசோதனைகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ள இச் செயலமா்வில அயற்பாடசாலையைச் சோ்ந்த 15 விஞ்ஞான ஆசிரியா்கள் மற்றும் இப்பாடசாலையைச்சோ்ந்த கணித,விஞ்ஞான ஆசிரியா்கள் ஆகியோா் கலந்து கொள்ளவுள்ளனா்.

தேசியக் கல்வி நிறுவகத்தினராலும் ஜே.ஐ.சி.ஏ. ஆய்வு அணியின் துணைக்குழு உறுப்பினா்களாலும் நடாத்தப்படவுள்ள இச் செயலமா்வில் தாய்லாந்தில் நடைபெற்ற சா்வதேச மாதிரிப் பரிசோதனை மாநாட்டில் பிரேரிக்கப்பட்ட முக்கிய பல விடயங்கள கலந்துரையாடப்படவுள்ளன.

முழுநாள் செயலலமா்வாக நடைபெறவுள்ள இந்நிகழ் வில், வலயக் கல்வி அதிகாரிகளும் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (18)

# வட-கிழக்கு புனரமைப்புக்கு உலக வங்கி மேலும் நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டவா்களின் புனா வாழ்வுக்கும், அப்பகுதியில் அமைதியைத் தோற்றுவிப்பதற்கும் உலகவங்கி 64.7 மில்லியன் அமெரிக்க டொலா் நிதியுதவியை இலங் கைக்கு வழங்கியுள்ளது.

வடக்கு- கிழக்கின் நீா்ப்பாசனத் திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்கான ஒப்பந்தமொன்று நேற்றுமுன்தினம் அரச பிரதிநிதிகளுக்கும், உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கைச்சாத் திடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடா்பான அறிக்கையொன்றையும் உலக வங்கி வெளியிட்டுள்ளது. 2000ஆம் ஆண்டு உலக வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்த இரண்டாம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்

# குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு கைரேகைப் பிரிவு இன்றியமையாதது

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் கைவிரல்ரேகை அடையாளங்களைப் பயன்படுத்தும் வசதிகள் பூரணமாக உபயோகிக்கப்படவில்லை எனப் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாட்டின் சகல பகுதிகளிலும் குற்றச்செயல்களைக் கண்டுபிடிக்கும் பணியகத்திற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கென நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், குற்றவாளிகள் தொடர்பான விசாரணைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட வேண்டுமானால் விரல் அடையாளப் பிரிவினரின் சேவைகள் மிகவும் அவசியமானதாகும்.

நாட்டின் சகல பகுதிகளிலும் அண்மைக்காலமாக குற்றச்செயல்கள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ் திணைக்களம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றது எனத் தெரிவித்தார். (60,10)

---

## தமிழீழ மருத்துவப்...

கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து சிறப்புரையாற்றும்போதே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் எவராலும் வெல்லமுடியாத வகையில் வலுப்பெற்றுள்ளது. பாரிய மருத்துவத் தடைகளையும், பொருளாதாரத் தடைகளையும் சந்தித்த எமது மக்களுக்கும், களமுனைப் போராளிகளுக்கும் எமது மருத்துவப் பிரிவினர் தமது மருத்துவப் பணிகளை ஆற்றியுள்ளார்கள்.

தமிழ்மக்களையும், தமிழ்மக்களுடைய போராட்டத்தையும் நசுக்குவதற்கு எதிரி இப்பொழுதும் திட்டமிட்டுக்கொண்டுதான் இருக்கின்றான்.

எங்களுடைய மண்ணிலுள்ள மருத்துவர்கள் குறிப்பிட்டளவு மருத்துவப் போராளிகளுடன் நின்று பாரிய இராணுவத் தாக்குதல்களை எதிர்கொண்டு, தமிழ் மக்களைக் காத்து தமது மருத்துவப் பணிகளை மேற்கொண்டுள்ளார்கள் என்றார். (உ-121)

---

## மட்டக்களப்பு - அம்பாறை...

அவரை விசாரணைக்கு வருமாறு அழைத்துச் சென்று சுட்டுக்கொலை செய்துள்ளதாக இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் அவருடைய சடலம் நேற்று வீதியொன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

பாண்டிருப்பில் நடந்த மற்றைய சூட்டுச் சம்பவத்தில், வாய்க்குள் துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் பாண்டிருப்பு மயானத்திலிருந்து நேற்று அதிகாலை இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார். சிதம்பரப்பிள்ளை துஸ்யந்தன் (வயது 25) என்ற இளைஞனே சடலமாகக் கண்டெடுக்கப்பட்டவராவார்.

இவரும் மண்டூரைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த துஸ்யந்தன் கல்முனை கட்டடத் திணைக்களத்தில் தற்காலிக ஊழியராகப் பணியாற்றுவதாகவும், இவர் விடுதியில் தனியாகத் தங்கியிருந்தார் என்றும், நேற்று அதிகாலை அங்கிருந்து கடத்திச்செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார் என்றும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் கல்முனைப் பொலிஸார் தெரிவித்துள்னர்.

இந்த இரண்டு கொலைச் சம்பவங்களுக்கும் 9 மில்லி மீற்றர் ரக கைத் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலையாளிகள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (121)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் செல்வநாயகம் பொன்னம்மா

26.06.04 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் உதவிகள் வழங்கியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நறுவிலி வீதி,
புலோலி தெற்கு, புலோலி (C/376)

## 31 ஆம் நினைவுநாள் 25.07.2004



அமரர் ஸ்ரீ ராமச்சந்திரன்

கடந்த 25.06.2004 டென்மார்க்கில் காலமான எமது அன்பு அண்ணன் அமரர் ஸ்ரீராமச்சந்திரன் அவர்களே, தந்தைக்குத் தந்தையாக அண்ணனுக்கு அண்ணனாக இருந்து எம்மை வழிநடத்திச்சென்றீரே. எனி எப்போ காண்போம் உமது புன்சிரிப்புடன் கூடிய இன்முகத்தை. எப்போ கேட்போம் உமது இன் சொல்லை. உமது ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் ஈடுசெய்யமுடியாத துயருற்றிருக்கும் அவர் தம் மனைவி, மக்கள் மற்றும் குடும்பத்தினருக்கும் எமது மனவேதனையையும், ஆறுதலையும், ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புச் சின்னம்மா: கனகரத்தினம் செல்லம்மா
க. வைகுந்தவாசன் குடும்பம் - டென்மார்க்
க. விஜயவாசன் குடும்பம் - மீசாலை
கு. விஜயகுமாரி குடும்பம் - நுணாவில்
பா. ஜெயகுமாரி குடும்பம் - நுணாவில்

(8664)


## வர்த்தக - கல்வி நிலையங்கள் இன்று பூட்டப்படும்

(யாழ்ப்பாணம்)

1983 கறுப்பு ஜூலை தினத்தினை நினைவுகூரும் வகையில் குடாநாட்டு வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களைப் பூட்டி துக்க தினத்தை அனுஷ்டிக்குமாறு யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் கா.நித்தியானந்தம் கேட்டுள்ளார்.

இதேவேளை, தனியார் கல்வி நிறுவனங்களை இன்றைய தினம் பூட்டி துக்க தினத்தை அனுஷ்டிக்குமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியச் செயலாளர் எஸ். சுபநாதன் கேட்டுள்ளார். (த)

## பஸ் - வான் விபத்தில் பத்துப் பேர் பலி

(கொழும்பு)

கதிர்காமம் திஸ்மாகரகாமம் வீதியில் நேற்றுப் பிற்பகல் தனியார் பஸ் ஒன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்தனர். மேலும் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 5 ஆண்களும், 4 பெண்களும், குழந்தை ஒன்றும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-08)

---

## 83 கறுப்பு...

இயங்கலாம்.

தமிழர்களை அழித்து, சிங்கள பௌத்த நாடாக இலங்கையை மாற்ற இன்று முய்யன்றுகொண்டு இருக்கின்றனர். இதனைத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

மீண்டும் மீண்டும் ஜூலைக் கலவரத்தை தமிழர்கள் தங்கள் நினைவில் கொள்வீர்கள். இதற்குரிய பதிலை நிச்சயம் கொடுப்பார்கள் என்பதை வலியுறுத்தும் வகையில் இன்றைய துக்கநாளை அனைத்துத் தரப்பினரும் அனுஷ்டிக்கும் வகையில் கறுப்புப்பட்டி அணிந்தும்,

வீடுகள் வேலைத் தளங்களில் கறுப்புக்கொடி பறக் கவிட்டும் கறுப்பு ஜூலை நினைவாக நினைவுக் கூட்டங்கள் நடாத்தியும் துக்கநாளை முன் னெடுக்குமாறு வேண்டுகின்றோம் என்றுள்ளது. (த)

---

## வங்கி...

இந்நிலையில் நவாலி வெளிப் பகுதியில் வீதி ஓரத்தில் இருந்து 200 யார் தொலைவில் சைக்கிள் ஒன்று கிடப்பதை அப்பகுதியால் சென்றுவந்தவர்கள் அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொதுமக்கள் சைக்கிள் கிடந்த இடத்திற்கு சற்றுத் தொவைில் சடலம் ஒன்று கிடப்பதை நேற்றுமாலை அவதானித்தனர். இதனையடுத்து இதுவிடயம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் அராலியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பஞ்சலிங்கம் (வயது 53) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். (த)

---

## பெங்களூருக்குச்...

யம் ஊடாக நேற்று மாலை 4 மணிக்கு சென்னை விமான நிலையத்தைச் சென்றடைந்த இவர்களை விமான நிலைய அதிகாரிகள் சோதனையிட்டனர்.

இதன்போது ஈழவேந்தனை மேற்கொண்டு பயணம் செல்வதற்கு விமான நிலைய அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர். அவரை மேற்கொண்டு செல்ல அனுமதிக்கமுடியாது என அதிகாரிகள் உறுதியாகக் கூறிவிட்டனர்.

இதனையடுத்து, நேற்றிரவு சென்னை விமான நிலையத்திலிருந்து வலுக்கட்டாயமாக எம்.பி. ஈழவேந்தன் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டார். (த-121)

# இன்றைய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிவசக்தி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி திருமதி காங்கேயன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ந)

* * * * * *

(இணுவில்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும், முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து நடாத்தும் முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா இன்று காலை 9மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வலி தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ.அரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிதெற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம், முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலையத் தலைவர் சி.சிவனேயன், வலிதெற்கு சமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி சி.மன்மதராஜன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய வலிகாமம் வலய இணைப்பாளர் திருமதி யோ.கேமநளினி, செனட் நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர் இ.தவகோபால் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (உ)

* * * * * *

(பொன்னாலை)

இளவாலை புனித யாகப்பர் ஆலய 125 ஆவது ஆண்டு யூபிலித் திருவிழா இன்று நடைபெறவுள்ளது. இன்று காலை திருவிழாத் திருப்பலி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-49)

* * * * * *

(பொன்னாலை)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-49)

* * * * * *

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பிரதேசத்தின் 'வீரமுரசம்' எழுச்சி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு கரவெட்டி இராச கிராமத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

வீரமுரசம் எழுச்சி நிகழ்வைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள் பலவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-43)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வுகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் நடைபெற்றுவருகின்றன. இந்த வகையில் காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கமம் இன்று பி.ப 2.30 மணிக்கு அதன் செயலாளர் வே.சிற்சபேசன் தலைமையில் புதுறோட், காரை. சுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதேவேளை, யாழ்ப்பாணப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கமம் நாவலர் கலாசார மண்டபத்தில் அதன் செயலாளர் எஸ்.சிவஞானசேகரம் தலைமையில் பி.ப 3.00 மணிக்கும், கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் சங்கமம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் மு.ப 10.00 மணிக்கும் நடைபெறவுள்ளது. (உ)

* * * * * *

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் இலவச கண்சிகிச்சை முகாமும், பொது மருத்து சிகிச்சையும் இன்று வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை தலைமையிலான வைத்திய நிபுணர் குழு பொது மருத்துவ சிகிச்சைகளை இலவசமாக வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

* * * * * *

---

## புலிகளுடன் தொடர்பு...

உலக வங்கி தொடர்புகளைப் பேணிவருவதோடு உலக வங்கியின் செயற்திட்ட அறிக்கைகளையும் கிளிநொச்சியில் உத்தியோகபூர்வ வைபவமொன்றில் அவர்களிடம் கையளித்திருப்பதை தேசாபிமானிகள் அமைப்பு கடுமையாக ஆட்சேபிப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் அரசாங்கங்களுக்கும் பெரும்தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுவரும் உலகவங்கியின் செயற்திட்ட அறிக்கையை உலகின் பல நாடுகளால் தடை செய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிடமும் அதிகாரபூர்வ நிகழ்வொன்றில் வைத்து கையளித்திருப்தற்கான காரணத்தை இறைமையுள்ள இலங்கை அரசாங்கத்திற்கு தெரிவிக்கவேண்டும் என்றும் தேசாபிமானிகள் அமைப்பு உலக வங்கி வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்டுக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் தெரிவித்துள்ளது.

உலகவங்கியின் நடவடிக்கை தொடர்பான கண்டனக் கடிதத்தில், எல்ல குணவன்ஸ தேரர், கலாநிதி குணதாஸ அமரசேகர, அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, பேராசிரியர்களான உபாலி ஜெயசேகர, கிரானவில் தர்மவர்தனா ஆகியோர் கையொப்பமிட்டுள்ளார்கள். (த)

---

## வெள்ளை....

காரியவாசம் கூறினார். இந்த யானையின் இயல்புவாழ்வை பாதிக்காமல் அது தனது சொந்தப் பிரதேசத்திலேயே வாழ அனுமதிக்கப்படும். வெள்ளை யானை பற்றி இந்து சமயத்திலும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் பௌத்த சமயத்திலும் இதுபற்றிய வரலாறு ஒன்று உண்டு. (உ-06,60)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாங்கெரு. யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.